வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 12.06.2023 திங்கட்கிழமை | இதழ் : 185 | பக்கங்கள் : 16


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

## டியாகோ கார்சியா அகதிகள் தற்கொலைக்கு முயன்றனர்

லண்டன், ஜூன் 12

டியாகோ கார்சியா தீவில் தடுத்துவைக்கப் பட் டுள்ள இலங்கையை சேர்ந்த புகலிட கோரிக்கை யாளர்கள் பல்வேறு துன் பங்களுக்கு முகங்கொடுத் துள்ளனர். இவர்களில் 12 பேர் தவறான முடிவு எடுத்து உயிர்துறக்க முயன்றுள்ளனர் என பி. பி. சி. தெரிவித்துள்ளது.

டியாகோ கார்சியா வில் கடந்த 20 மாதங்க ளாக தடுத்து வைக்கப் பட்டுள்ள இலங்கையை சேர்ந்த குடியேற்றவாசி களே இவ்வாறு செயல் பட்டுள்ளனர்.

இந்துசமுத்திரத்தில் உள்ள பிரிட்டனுக்கு சொந்தமான சிறிய தீவில் இலங்கையை சேர்ந்த 89 குடியேற்றவாசிகள் சிக் குண்டுள்ளனர் என தெரி வித்துள்ள பிபிசி சட்டவிரோத பய ணங்களின் போது

15

## இன, மத சிறுபான்மையினரை மௌனமாக்க நடவடிக்கைகள்

### இலங்கை குறித்து அமெரிக்கா கவலை

வாஷிங்டன், ஜூன் 12

இலங்கையில் இன, மத சிறுபான்மையினரை மௌனமாக்க மேற் கொள்ளப்படும் நடவ டிக்கைகள் தொடர்பில் அமெரிக்க செனட்டின் வெளிவிவகார குழு கவலை வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் செனட் வெளிவிவகார குழுவின் உத்தியோக பூர்வ ருவிற்றரில் இது குறித்து தெரிவிக்கப்பட் டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பி னர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விடுவிக் கப்பட்டதை வரவேற்கும் அதேவேளை அவர் கைதுசெய்யப்பட்டமை - அச்சுறுத்தப் பட் டமை - துன்புறுத் தப் பட்டமை

15

## உள்ளூராட்சி வேட்பு மனுக்களை இரத்து செய்வதற்கு யோசனை!

### இராஜாங்க அமைச்சர் வக்கும்புர

கொழும்பு, ஜூன் 12

உள்ளூராட்சி மன்ற தேர்தலின் வேட்புமனுக் களை இரத்து செய்வதற் கான யோசனை முன்வைக் கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூ ராட்சி இராஜாங்க அமைச் சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகள் மற் றும் உள்ளூராட்சி அமைச்சரும் பிரதமரு மான தினேஷ் குணவர்த் தன தலைமையில் அண் மையில் நடைபெற்ற ஆலோசனைக் குழு கூட் டத்தில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த ஆலோசனை குழுவில் பங்குபற்றிய பாராளுமன்ற உறுப்பினர் கள் பலரும் இது தொடர் பான யோசனையை முன்வைத்திருந்தனர். ஆலோசனைக் குழுவில் பங்கேற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தமது இணக்கத்தை தெரிவித் தனர்.

தேர்தல் அறிவிக்கப் பட் டுள்ள போதி லும், அது தொடர்ந் தும் தாமதப்படுத்

15

### சீனா செல்லும் முன் அழைத்தது இந்தியா

# ஜூலை 21ஆம் திகதி ரணில் - மோடி சந்திப்பு

**கொழும்பு, ஜூன் 12**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்தியா வருமாறு உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது. அங்கு செல்லும் ஜனாதிபதி எதிர்வரும் ஜூலை 21ஆம் திகதி அந்நாட்டின் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேச்சு நடத்துவார்.**

இலங்கையின் தலைவ ராக யார் தெரிவானாலும் அவர் இந்தியாவுக்கு முதல் உத்தியோக பூர்வ பயணத்தை மேற்கொள் வது சம்பிரதாயமாகும். இது வழக்கமானதாக இருந் தாலும் ஜனாதிபதியாக தெரிவான ரணில் விக்கிரமசிங்கவை இந் தியா அழைக்கவில்லை. இத னால், அவர் தனது முதல் உத்தியோகபூர்வ பய ணத்தை இந்தியாவுக்கு மேற்கொள்ள முடியாத நிலை காணப்பட்டது.

பல தடவைகள் இதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்ட நிலையில், அது சாத்தியமாக வில்லை. இந்த நிலையில், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

15



(கோப்புப் படம்)

## 3 மாதங்களில் நாட்டின் கடன் 685. 6 கோடி டொலர்கள் உயர்வு

கொழும்பு, ஜூன் 12

இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மட் டும் உள்நாட்டு கடன் அதி கரிப்பால் நாட்டின் மொத்த கடன் 685. 3 கோடி டொலர்களால் அதிகரித்துள்ளது என்று திறைசேரியின் பகுப் பாய்வு அறிக்கை மூலம் தெரிவத்துள்ளது.

கடந்த மார்ச் மாத இறுதியில் நாட்டின் மொத்த பொதுக் கடன் 8 ஆயிரத்து 470. 3 கோடி டொலர்களில் இருந்து 9 ஆயிரத்து 156. 1 கோடி டொலர்களாக அதிகரித் துள்ளது.

கருவூல உண்டியல் கள், கருவூல பத்திரங்கள், பாதுகாப்பு அமைச்சின் கடன் கணக்கு, ஓய்வூதிய பணிக்கொடை போன்ற பல வடிவங்களில் அர சாங்கம் மேலும் கடன் வாங்கியதால் உள்நாட் டுக் கடன் கடந்த ஆண்டு டிசெம்பரில் 4 ஆயிரத்து 12 கோடி டொலர்களில் இருந்து மார்ச் மாதத்துக் குள்4ஆயிரத்து 689 கோடி டொலர்களாக உயர்ந்தது.

இந்த ஆண்டு மார்ச் இறுதியில்

15

## ஜனாதிபதியுடன் ஆளும் கட்சியினர் இன்று சந்திப்பு!

கொழும்பு, ஜூன் 12

ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவுக்கும் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான விசேட சந் திப்பு இன்று திங்கட் கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள் ளது.


நாட்டில் தற்போதைய பொருளாதார, அரசியல் நிலவரங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, ஆளுங்கட்சி யின் பாராளுமன்ற உறுப் பினர்கள் மற்றும் அமைச் சர்கள் தாம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளில் எதிர்கொள்ள நேரிட்டுள்ள பிரச்னைகள் தொடர்பில் ஜனாதிபதியிடம் தெளிவு படுத்தவுள் ளனர்.

15

## ராஜீவ் கொலையாக முன்னரே எச்சரிக்கை விடுக்கப்பட்டது!

சென்னை, ஜூன் 12

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி யின் மறைவுக்கு ஒரு வாரம் முன்பு ராஜீவ் காந்தி பாதுகாப்பாக இருக்க வேண்டும் என காஞ்சி சங்கர மடத்திலிருந்து எச்சரிக்கப்பட்ட தாக ராஜீவ் காந் தியின் பாதுகாப்பு




அதிகாரியாக இருந்த டி. என். சேஷனின் சுயசரிதை நூலில் கூறப்பட்டுள் ளது. டி. என். ஷேஷன் எழுதிய

15

## நிபந்தனைகளை விதித்து பேச்சுகளை குழப்பாதீர்கள்

### தமிழ் கட்சிகளுக்கு சொல்கிறார் மகிந்த

கொழும்பு, ஜூன் 12

ஜனாதிபதியுடனான பேச்சுகளில் ஆரம்பத்தி லேயே நிபந்தனைகளை முன்வைத்து - எச்சரிக்கை களை விடுத்து குழப்பி



யடிக்க வேண்டாம் என்று தமிழ்க் கட்சிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன் என்று சிறீ லங்கா பொது ஜன பெர முனவின் தலை

15

## சகல கட்சிகளும் இணைந்தாலும் பெரும்பான்மை பெற முடியாது!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஜூன் 12

பழைமை வாய்ந்த சிந் தனைகளுடன் செயல்படு வதால் மக்கள் ஆதரவை பெற்றுக்கொள்ளவோ தேர்தலில் வெற்றி



பெறுவதோ இன்றைய காலகட்டத்தில் சாத்திய மில்லை. பாராளுமன் றத்தை பிரதிநிதித்து வம் செய்யும் அனைத்து கட்சிக

15

# வெளிவிவகார அமைச்சு நீதியை பெற்றுவழங்குவதில் தவறிவிட்டது

## தேசிய கணக்காய்வு பணிமனை

கொழும்பு, ஜுன் 12

வெளிநாட்டில் தொழிலில் ஈடுபட்டிருந்தபோது உயிரிழந்த மற்றும் விபத்துக்கு உள்ளான இலங்கையர்களுக்கு இழப்பீடு மற்றும் நீதியைப் பெற்றுக்கொடுப்பதில் வெளிவிவகார அமைச்சு தனது பொறுப்புகளை நிறைவேற்ற தவறியுள்ளதாக தேசிய கணக்காய்வு பணிமனை சுட்டிக்காட்டியுள்ளது.

வெளிவிவகார அமைச்சு, கவனக்குறைவாகவும் மெதுவாகவும் செயல்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தனது கண்காணிப்பின் மூலம் வெளிப்படுத்தியுள்ளது.

வெளிவிவகார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த அறிக்கை தொடர்பில் ஆராய்ந்தே தேசிய கணக்காய்வு அலுவலகம் இதனை தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் போது உயிரிழந்தவர்கள் மற்றும் ஊனமுற்றவர்களுக்கு இழப்பீடு வழங்குவதில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

சவூதி அரேபியாவில் 2012 ஆம் ஆண்டு விபத்துக்கு உள்ளாகி முற்றிலும் ஊனமுற்ற நபரொருவருக்கு இழப்பீடு கிடைப்பதில் 10 ஆண்டுகள் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அது தொடர்பான வழக்குப்பதிவும் அமைச்சின் அலட்சியப் போக்கால் பல ஆண்டுகளாக காணாமல் போனதாகவும் தேசிய கணக்காய்வு பணிமனை தெரிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு குவைத்தில் வீட்டுப் பணிப்பெண்ணாகப் பணிபுரிந்த போது உயிரிழந்த பெண்ணொருவரின் உடல் உறுப்புகள் அகற்றப்பட்டுள்ளதாக தெரியவந்தும் குறித்த மரணம் இடம்பெற்று 10 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரையில் சட்ட வைத்திய அறிக்கை பெறப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, வெளிநாட்டு தூதரக சேவைக்காக வெளிநாடு சென்றுள்ள பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளுக்கான பாதுகாப்பு வைப்புத்தொகை, ஐந்து கோடியே 56 இலட்சத்து 19 ஆயிரத்து 842 ரூபாய் பயன்படுத்தப்படாத வீடுகளில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

ஒரு கோடியே 22 இலட்சத்து 5 ஆயிரத்து எண்ணூற்று 75 ரூபாய் வைப்புத் தொகையை 20 வருடங்களாக மீளப் பெறுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தேசிய கணக்காய்வு அலுவலகம் கூறுகிறது.

2019 ஆம் ஆண்டு மின்சார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் பெறுமதியான வாகனம் மற்றும் 2020 ஆம் ஆண்டு மோசடி செய்யப்பட்ட 2 கோடியே 12 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 5 வாகனங்கள் குறித்து தகவல்கள், நிதிநிலை அறிக்கைகளில் வெளிப்படுத்தவில்லை எனவும் தேசிய கணக்காய்வு அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் 2011ஆம் ஆண்டு இடம்பெற்ற 1,583 அமெரிக்க டொலர்கள் திருட்டு சம்பவத்துக்கு இன்று வரை தீர்வு காணப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

2021 செப்ரெம்பர் மற்றும் 2022 நவம்பருக்கு இடையில் அமைச்சு, மூன்று கோடியே 18 இலட்சத்து 55 ஆயிரத்து நூற்று அறுபத்து ஒன்பது ரூபாய் மற்றும் இரண்டு வெளிநாட்டு தூதுக்குழுக்களுக்கான 12 காசோலைகள் எதற்காக செலவிடப்பட்டன என்பது வெளிப்படுத்தப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டது. (ஐ)

# சாரதி அனுமதிப் பத்திரங்களை 3ஆம் தரப்பு மூலம் வழங்க முயற்சி

கொழும்பு, ஜுன் 12

இதுவரையில் வழங்க முடியாத சாரதி அனுமதி அட்டைகளை மூன்றாம் தரப்பினர் மூலம் வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

இதற்கு தேவையான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

எட்டரை இலட்சம் சாரதி அனுமதிப் பத்திரங்கள் மூன்றாம் தரப்பினரால் அச்சிடப்பட்டு உரிமைதாரர்களுக்கு வழங்கப்படும் என மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

வழங்க முடியாத சாரதி அனுமதி அட்டைகளை மட்டும் 6 அல்லது 7 மாதங்களுக்குள் மூன்றாம் தரப்பினர் மூலம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)




# கடல்நீரை குடிதண்ணீராக்கும் திட்டம் தாளையடியில் ஆரம்பம்

வடமராட்சி, ஜுன் 12

வடமராட்சி கிழக்கு -தாளையடி குடிதண்ணீர் திட்டம் மீண்டும் ஆரம்பமாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண குடாநாட்டுக்கான குடிதண்ணீர் வழங்கல் திட்டத்தின் கீழ் தாளையடி பகுதியில் கடல்நீரை நன்னீராக்கும் திட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

# ஒரு மூடை யூரியா உரத்தை ரூ. 5,000 வழங்க நடவடிக்கை

## மகிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 12

அடுத்த பெரும்போகத்திலிருந்து ஒரு மூடை யூரியா உரத்தை 5 ஆயிரம் ரூபாய்க்கும் குறைவான விலையில் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமஹாராமை பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நேற்றுமுன்தினம் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட 22ஆயிரத்து 500 மெற்றிக் தொன் யூரியா உரத்தை பகிர்ந்தளிப்பது தொடர்பிலும் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதி முதல் யூரியா உர மூடை ஒன்றின் விலையை 9 ஆயிரம் ரூபாய் வரை குறைப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# சடலம் மீட்பு

மட்டக்களப்பு, ஜுன் 12

மட்டக்களப்பு - ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னக்குடா கடற்கரையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சடலமொன்று கரையொதுங்கியது.

கடற்றொழிலுக்கு சென்ற மீனவர்கள் சடலத்தை கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் சவுக்கடி கடலில் மீன்பிடியில் ஈடுபடும் 45 வயதுடைய தளவாயை சேர்ந்த தங்கராசா விஜயன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# இலங்கையில் 40 இலட்சம் பேர் புதிதாக வறியவர்களாகினர்!

கொழும்பு, ஜுன் 12

நாட்டில் கடந்த நான்கு ஆண்டுகளில் 40 இலட்சம் மக்கள் புதிதாக வறியவர்களாக மாறியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

லிறின் ஆசியா நிறுவனம் நடத்திய ஆய்வில் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

அதன்படி, 2023 ஆம் ஆண்டுக்குள் நாட்டில் மொத்த வறியவர்களின் எண்ணிக்கை 70 இலட்சமாக இருக்கும் என்று அந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

வறுமைக் கோட்டுக்குக் கீழே வசிப்பவர்களில் 81 சதவீதம் பேர் கிராமப்புற மக்கள் என்றும், 2019 முதல், கிராமப்புற வறுமை 15 சதவீதத்திலிருந்து 32 சதவீதமாக இருமடங்காக அதிகரித்துள்ளது என்றும் இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதனிடையே, 2019 இல் 6 சதவீதமாக இருந்த நகர்ப்புற வறுமை மூன்று மடங்காக உயர்வடைந்து 18 சதவீதமாக அதிகரித்துள்ளது.

அத்துடன், பெருந்தோட்ட சமூகத்தில் 50 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த ஆய்வில் தெரியவந்துள்ளது. (ஐ)

# பாடசாலை அதிபர் ரயில் மோதி பலி!

நுவரெலியா, ஜுன் 12

பாடசாலையை சுத்தப்படுத்தும் பணியை மேற்பார்வையிட சென்றுவிட்டு திரும்பிய நுவரெலியா ரதல்ல தமிழ் வித்தியாலய அதிபர் சுப்பிரமணியம் ரயில் மோதி உயிரிழந்தார்.

இன்றைய தினம் பாடசாலை ஆரம்பமாகின்றன. இந்த நிலையில் பாடாலையை சுத்தப்படுத்தும் பணியை மேற்பார்வையிடுவதற்காக அதிபர் சென்றிருந்தார்.

அங்கிருந்து அவர் தலவாக்கலையிலுள்ள வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தபோதே ரயில் மோதி உயிரிழந்தார். (ஐ)

# ஊழல் மோசடி சட்டத்தை அரசுக்கு சார்பானதாக உருவாக்க முயற்சி!

## ஐக்கிய மக்கள் சக்தி சாடல்

கொழும்பு, ஜுன் 12

ஊழல் , மோசடி சட்டமூலம் அரசாங்கத்துக்கு சார்பானதாக உருவாக்கப்படக்கூடாது. எனவே, இதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் சட்டத்தரணிகள், வங்கி அதிகாரிகள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் உள்வாங்கப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் பணிமனையில் நேற்று அவர் செய்தியாளர்களை சந்தித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

நாடு விரைவில் அபிவிருத்தியடைய வேண்டுமெனில் ஊழல் , மோசடிக்கு எதிரான சட்ட மூலம் அவசியமாகும். இது தொடர்பான சட்ட மூலம் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. ஆனால், அது அரசாங்கத்துக்கு சார்பாகவே தயாரிக்கப்படவுள்ளது.

உண்மையில் நாட்டில் ஊழல் மோசடிகள் ஒழிக்கப்பட வேண்டுமெனில் ஐக்கிய நாடுகள் சபையுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்துக்கு சமாந்தரமான சட்டமூலம் உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறான சட்டமே பலம் மிக்கதாகக் காணப்படும்.

அத்துடன், பொலிஸாரால் மாத்திரம் ஊழல், மோடிசக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது. எனவே இது தொடர்பான நடவடிக்கைகளில் சட்டத்தரணிகள் , வங்கி அதிகாரிகள் உள்ளிட்ட துறைசார் நிபுணர்களும் உள்வாங்கப்பட வேண்டும்.

மோசடியில் ஈடுபடுபவர்களுக்கு மோசடி செய்யப்படும் தொகைக்கு சமாந்தரமான தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும் என்பதோடு, 10 வருட சிறை தண்டனையும் வழங்கப்பட வேண்டும். முறையான சட்டமூலம், அறிமுகப்படுத்தப்பட்டு அது உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
12.06.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 29

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சந்தர்ப்பங்களை கையாளுதல்?

தமிழ் கட்சிகள் ரணில் விக்கிரமசிங்கவோடு பேசி வருகின்றன. சில தினங்களுக்கு முன்னர் சம்பந்தனின் வேண்டுகோளுக்கு இணங்கவும் சந்திப்பொன்று இடம்பெற்றிருந்தது. இதன்போது, ரணில் விக்கிரமசிங்கவின் பதில், தமிழ் கட்சிகள் என்ன கோருகின்றன என்பதற்கு அப்பால் தான் இதனைத்தான் செய்ய விரும்புகிறேன் என்றவாறு பதிலளித்திருக்கின்றார். இதேவேளை, விக்னேஸ்வரனால் பரிந்துரைக்கப்பட்ட ஆலோசனை சபையை பரிசீலிக்கவுள்ளார் என்றும் கூறியிருக்கின்றார்.

இதேவேளை, விக்னேஸ்வரன், பிரதமர் தினேஸ் குணவர்த்தனவுடன் தனியாகவும் பேசி வருகின்றார். இதன் மூலம் பிரேமதாஸவால் மாகாண சபையிலிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களைத் திரும்பப் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளதாகவும் கூறிவருகின்றார். ஆனால், விடயங்களை ஆழமாக நோக்கினால் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் தமிழ் மக்கள் நன்மைகளை பெறக்கூடிய வாய்ப்புகள் ஏராளம் – அதனை நாம் தவறவிட்டுவிடக்கூடாது என்னும் ஒரு கருத்து அரசியல் மேற்பரப்புக்குக் கொண்டுவரப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில் தமிழ் கட்சிகள் வெளிப்படையாக தன்னை ஆதரித்தாலும் அல்லது ஆதரிக்காவிட்டாலும்கூட, தமிழ் மக்கள் தனக்கே வாக்களிப்பார்கள் என்றே நம்புவது போன்றே தெரிகின்றது. ஏனெனில், 2005இல் பகிஷ்கரிப்பை மேற்கொண்டு ரணிலுக்கு நெருக்கடியை ஏற்படுத்தக்கூடிய வல்லமையுடன் இப்போது எவருமில்லை. அதேவேளை ஜனநாயக முறைமைக்கு மாறான வழிமுறைகளில் தமிழ்க் கட்சிகளால் பயணிக்கவும் முடியாது. ஏனெனில், தமிழ் கட்சிகளை காத்திரமான அரசியல் சக்தியாக ரணில் கருதுவதாகத் தெரியவில்லை. அதேவேளை தமிழ் கட்சிகள் மத்தியில் ஒருங்கிணைந்த செயல்பாடுகள் இல்லை என்பதும் அதற்கான முயற்சிகளில் ஈடுபடக்கூடிய நிலையில் கட்சிகளின் தலைமைகள் இல்லை என்பதும் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெரியும். ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஏனைய சிங்கள கட்சிகளின் தலைவர்களுக்கு உள்ள அடிப்படையான விடயம் ரணில் தமிழ் சூழலின் பலம் பலவீனத்தை நன்கறிந்த ஒருவர்.

ஜனாதிபதி தேர்தலை முன்வைத்து ரணில் காய்களை நகர்த்திக் கொண்டிருக்கும்போது, தமிழ் கட்சிகளும் ஜனாதிபதி தேர்தலை முன்வைத்தே தங்களின் தந்திரோபாயத்தை வகுக்க வேண்டும். ஏனெனில், ஜனாதிபதி தேர்தல் தமிழர் தரப்புக்குப் பேரம் பேசுவதற்குக் கிடைக்கும் ஒரு துருப்புச் சீட்டாகும். 2015இல் ஏற்பட்ட ஜனாதிபதி தேர்தல் தமிழர் தரப்புக்கு மிகவும் சாதகமாக இருந்தது. ஆனால், அதனை சரியாகப் பயன்படுத்திக் கொள்வதில் சம்பந்தன் தவறிழைத்தார். சூழ்நிலையை சரியாகப் புரிந்து கொள்ளாமல் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசி வாய்பை நழுவவிட்டார்.

இப்போது மீண்டுமொரு வரலாற்று சந்தர்ப்பம் கதவைத் தட்டுகின்றது. அதனை ஆரத்தழுவி பயன்படுத்திக்கொள்வது தொடர்பில் தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தும் ஓரணியாக நிற்க வேண்டும். இந்த சந்தர்ப்பத்தை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாமென்று தமிழ்த் தேசிய கட்சிகள் தங்களுக்குள் முதலில் சிந்திக்க வேண்டும்.

# மின்சார சபையை தனியார் மயமாக்கும் திட்டத்தை அரசு மீளப்பெற வேண்டும்!

## ஊழியர் சங்கம் கடும் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 12

மின்சார சபையை தனியார் மயமாக்கும் சட்டத்தை அரசாங்கம் உடனடியாக மீளப்பெற வேண்டும் என இலங்கை மின்சார ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அதன் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மின்சார சபையை 15 நிறுவனங்களாகப் பிரிக்கும் சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இன்னும் சில தினங்களில் இந்த சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என எமக்கு தகவல் கிடைத்துள்ளது.

இந்த முயற்சி முறியடிக்கப்பட வேண்டும். அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 6 வாரங்கள் கடந்ததும், ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் இந்த 15 நிறுவனங்களையும் அந்த சட்டமூலத்தின்படிதான் செயல்பட முடிவு செய்துள்ளதாகவும் எமக்கு தகவல் கிடைத்துள்ளன.

இந்த சட்டத்தின் ஏற்பாடாக இலங்கை மின்சார சபை ஊழியர்களின் ஓய்வூதியத்தை உள்ளடக்குவதில்லை என தீர்மானம் எடுத்துள்ளனர். நிறுவனங்களுக்கு மின்சார சபையை வழங்கும் சட்டத்தை உடனடியாக திரும்பப் பெற வேண்டும்.

இல்லையேல் 21ஆம் திகதி மின்சார சபையின் அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து மின்சார சபை அலுவலகத்தை விட்டு அனைவரும் வெளியேறி விகாரமஹாதேவி பூங்காவில் ஒன்று கூடுவோம். இது அரசாங்கத்துக்கும் எளிதாகும் - என்றார். (ஐ)

# எல். ஜி. பி. ரி. சமூகத்தினரின் உறவை த. தே. ம. முன்னணி அங்கீகரிக்கின்றது

யாழ்ப்பாணம், ஜூன் 12

மாற்று பாலின - பாலுறவு விரும்பிகளின் உரிமைகளை அங்கீகரித்தல், பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தலுக்கான அனைத்து சட்டங்களையும் ஆதரிப்பதக தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெளிவுபடுத்தியுள்ளது.

எல். ஜி. பி. ரி. சமூகம் தொடர்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் ஒருவர் பதிவிட்ட கருத்து சர்ச்சையானதை தொடர்ந்து தமிழ் தேசிய மக்கள் முன்னணி இந்த விளக்கத்தை தெரிவித்துள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் எல். ஜி. பி. ரி. சமூகத்தினரின் ஊர்வலம் ஒன்று நேற்று முன்தினம் இடம் பெற்றது. இது தொடர்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் ஒருவர் மோசமான கருத்தை தனது சமூக ஊடகத்தில் பதிவிட்டிருந்தார்.

இது தொடர்பில் தெளிவுபடுத்தல் ஒன்றை ருவிற்றரில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி வெளியிட்டுள்ளது. (ஐ)

# தட்டுப்பாடின்றி எரிபொருளை நிலையங்களில் பெறமுடியும்!

## எரிசக்தி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 12

நாடளாவிய ரீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தட்டுப்பாடின்றி எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும் என்று மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தனது ருவிற்றர் பதிவில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுவரை நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் போதியளவு எரிபொருள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ள அவர், கடந்த 10 நாட்களில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் எவ்வாறு விநியோகிக்கப்பட்டன என்பது தொடர்பிலும் பதிவிட்டுள்ளார். (ஐ)

# சிறப்பு சொற்பொழிவு


தென்மராட்சி, ஜூன் 12

தென்மராட்சி - வரணி - கப்பைக்குறிச்சி கிழக்கு சோலைக்கூடல் அண்ணமார் ஆலயத்தில் வருடாந்த அலங்கார திருவிழாவில் சிறப்புச் சொற்பொழிவு இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை வரை தினமும் இரவு 7.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த சொற்பொழிவில் தலைமையுரையை ஆலயத்தின் தலைவர் வ. ஜீவாகரன் ஆற்றுவார். சொற்பொழிவை சைவப்புலவர்கள் சி. கா. கமலநாதன், செ. கந்த. சத்தியதாசன், செ. த. குமரன், இளம்சைவப் புலவர் க. கயிலைவாசன் ஆகியோர் ஆற்றுவர்.

சொற்பொழிவின் நிறைவில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**ஜுன் - 12 திங்கட்கிழமை**
**சோபகிருது வருடம் - வைகாசி 29**
**நல்ல நேரம் : 06.00 - 07.30**
**ராகு காலம் : 07.30 - 09.00**
**திதி : திதித்துவயம்**




**மேடம்**
கணவன் - மனைவிக்குள் மனஸ்தாபம் வந்து நீங்கும். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப்பாருங்கள். அகாரிகளுடன் அனுசரித்து போங்கள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**இடபம்**
எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். வியாபாரத்தில் புகழ்பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**மிதுனம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகளை ஏற்பீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள்.வியாபாரத்தில் தள்ளிப் போன ஒப்பந்தம் கையெழுத்தாகும். அமைதி நிலவும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் அதிருப்தி அடைவார்கள். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டும்.

**கன்னி**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். புது சலுகைகள் கிடைக்கும். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**துலாம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உவியாபாரத்தில் நவீன யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். தொட்டது துலங்கும் நாள்.

**விருட்சிகம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்களுக்கு வலிய வந்து உதவுவார்கள். உங்களின் கனவு நனவாகும் நாள்.

**தனுசு**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிடைக்கும். உயர்வு பெறும் நாள்.

**மகரம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். அதிகாரிகள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். மனசாட்சிப்படி செயல்படும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள்.வேலையாட்களிடம் பணிவாகப்பேசி வேலை வாங்குங்கள். பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும்.

# இலங்கை திரும்ப உதவுமாறு சாந்தன் பிரதமருக்கு கடிதம்!

சென்னை, ஜூன் 12

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று விடுதலையான சாந்தன் என்ற சுதேந்திரராஜா தாம் இலங்கை திரும்ப உதவவேண்டுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கோரிக்கையை முன்வைத்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அவர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இதில், “விடுதலை செய்யப்பட்ட கைதி என்ற நிலையில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளமையை காட்டிலும் முன்னர் ஆயுள் கைதியாக இருந்தமை சிறப்பாக இருந்தது. ஏற்கனவே பிரதமர், உள்துறை அமைச்சர் மற்றும் இலங்கை உயர்ஸ்தானிகரகம் என்பவற்றுக்கு எனது கோரிக்கைகளை முன்வைத்துள்ளேன். எனக்காக உலகெங்கிலும் உள்ள தமிழர்கள், குரல் கொடுக்கவேண்டும்.

கொடுமையான சிறைவாசம் 32 வருடங்களாக எனது அம்மாவை சந்திக்கவில்லை என்ற குற்ற உணர்வும் எனக்கு உண்டு. அதிகாரிகள் எங்களை உயிருடன் இருக்க அனுமதித்தனர். ஆனால், வாழ அனுமதிக்கவில்லை.

இதேவேளை என்னுடன் விடுவிக்கப்பட்ட முருகன், ரொபர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோரின் அறைகளின் யன்னல்கள் ‘சீல்’ வைக்கப்பட்டுள்ளன. சூரிய ஒளியைக்கூட அவர்களால் பார்க்கமுடியவில்லை.

தொலைபேசிகள் இல்லாமல், இரத்த உறவினர்கள் தவிர வேறு எவரும் தங்களை பார்க்க அனுமதிக்கப்படவில்லை - என்று குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)

# தமிழகம் வந்தார் அமித்ஷா; 24 பிரபலங்களுக்கு அழைப்பு

## பழனிசாமியை சந்திக்க மாட்டார்

சென்னை, ஜூன் 12

இந்தியாவின் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தமிழகம் வருகை தந்துள்ளார். அவர், அ. தி. மு. கவின் பொதுச் செயலாளரை சந்திக்க மாட்டார் என்பது உறுதியாகியுள்ள நிலையில் 24 பிரபலங்களை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

தமிழகம் வந்துள்ள அவர் பா. ஜ. கட்சியினரை சந்தித்து ஆலோசனையில் ஈடுபடவுள்ளார்.

அமித்ஷாவின் இந்தப் பயணத்தில் பா. ஜ. க. நிர்வாகிகளை மட்டுமே சந்திக்க முடிவு செய்துள்ளார். எடப்பாடி பழனிசாமி அமித்ஷாவை சந்திக்க மாட்டார் என்ற தகவல் உறுதியாகியுள்ளது.

இந்த நிலையில் சென்னை வருகை தந்துள்ள மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை நடிகர்கள் விஷால், ஜி.வி.பிரகாஷ் உள்ளிட்ட 24 பிரபலங்கள் சந்திக்க உள்ளனர். பா. ஜ. க. சார்பில் கலை, இலக்கியம் சார்ந்த நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ள நிலையில் பிரபலங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# காங்கிரஸ் கட்சியின் தமிழக தலைவர் பதவியில் மாற்றம்?

சென்னை, ஜூன் 12

மக்களவை உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகள் வகித்த கே. எஸ். அழகிரி, 2019ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு தலைவரானார். பாராளுமன்ற தேர்தலில் 9 இடங்களில் போட்டியிட்ட காங்கிரஸ் 8 இடங்களில் வெற்றி பெற்றது . தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலில் (2021) 25 தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர்கள்,18 இடங்களில் வெற்றி பெற்றது.

மாநில காங்கிரஸ் குழுவின் தலைவரின் பதவி காலம் சராசரியாக 3 ஆண்டுகள் என்ற நிலை இருந்தாலும், 4 ஆண்டுகளை கடந்தும் பதவியில் உள்ளார் கே. எஸ். அழகிரி. அகில இந்திய காங்கிரஸ் தலைமை அளிக்கும் பணிகளை 5 மாநில தலைமைகளே முழுமையாக செய்து முடிப்பதாகவும், அதில் கே. எஸ். அழகிரியும் ஒருவர் என தகவல் வெளியாகியுள்ளது. தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் வரலாற்றில் கடந்த 20 ஆண்டுகளில் 4 ஆண்டுகளாக தொடர்ந்து தலைவராக பதவி வகித்து வருகிறார் அழகிரி .

தமிழ்நாட்டில் இருந்து கடுமையான அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருவதுடன், தலைவர் பதவிக்கான தேர்வாக சசிகாந்த், செல்லக்குமார், மாணிக்கம் தாகூர், விஜயதாரணி, ஜோதிமணி, கார்த்தி சிதம்பரம் உள்ளிட்டோரின் பெயர்கள் அடிபடுகிறது.

பாராளுமன்ற தேர்தல் வரை கே. எஸ். அழகிரியை தலைவராக நீட்டிக்க காங்கிரஸ் தலைமை ஆலோசித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஒருவேளை அவரை மாற்ற முடிவு செய்தால் மேற்கண்டவர்களில் ஒருவர் தலைவராக அறிவிக்கப்பட வாய்ப்புள்ளது.

(ஐ)

# கடந்த 9 ஆண்டுகளில் பா. ஜ. க. தமிழகத்துக்கு செய்தது என்ன?

## முதல்வர் ஸ்டாலின் கேள்வி

சேலம், ஜூன் 12

“கடந்த ஒன்பது ஆண்டு கால பா. ஜ. கவின் ஆட்சியில் தமிழகத்துக்கு செய்த திட்டங்களை சென்னை வரும் உள்துறை அமைச்சர் அமித் ஷா பட்டியலிட்டு தெரிவிக்க வேண்டும் என தமிழக மக்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்” என்று சேலத்தில் நடந்த தி. மு. க. செயல் வீரர்கள் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

தமிழகத்தில் பத்தாண்டாக அ. தி. மு. க. ஆட்சி நடத்தி பாழ்படுத்தியது. மக்கள் அ. தி. மு. கவை அகற்றி விட்டு, நம்மை நம்பி ஆட்சியை ஒப்படைத்துள்ளனர். தி. மு. க ஆட்சி பொறுப்பேற்றதும் பெண்களுக்கு இலவச பேருந்து பயணம் முதல் எண்ணற்ற பல நூறு திட்டங்களை செயல்படுத்தி, மக்கள் நன்மதிப்பை பெற்றுள்ளோம். ஆட்சிக்கு வந்ததும் கட்சி வளர்ச்சி பாதை நோக்கி பயணமாகி வருகிறது. இதன் பயனாக தி. மு. கவில் 2 கோடி உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஒன்பது ஆண்டு கால பா. ஜ. க. ஆட்சியில் தமிழகத்துக்கு செய்த திட்டங்களை சென்னை வரும் உள்துறை அமைச்சர் அமித்ஷா பட்டியலிட்டு தெரிவிக்க வேண்டும் என தமிழக மக்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன். மத்தியில் ஆட்சி வகித்த காங்கிரஸ் உடன் தி. மு. க. கூட்டணி கொண்டிருந்த போது, மெட்ரோ ரயில் திட்டம் .உள்பட 619 திட்டங்கள் கொண்டு வந்து, 80 சதவீத பணி நிறைவேற்றப்பட்டது.

இந்திய அளவிலான மாநிலங்களில் தமிழகத்துக்கு 11 சதவீதம் நிதியை காங்கிரஸ் ஆட்சியில் பெற்றுள்ளோம். ஆனால், பா. ஜ. க. மதுரையில் இன்னும் எய்ம்ஸ் மருத்துவமனை திட்டத்தை நிறைவேற்றவில்லை என்பதற்கு உள்துறை அமைச்சர் அமித்ஷா பதில் அளிக்க வேண்டும். பா. ஜ. க. ஆட்சி சாதனையாக தமிழகத்தில் ஹிந்தி, சமஸ்கிருதம் திணிப்பு, குடியேறும் சட்டத்தால் சிறுபான்மையினரை ஒடுக்கியும், ‘நீட்’ தேர்வு கொடுமையுமே மிகுந்துள்ளது - என்றார்.

(ஐ)

# புகையிரத சேவை திணைக்களம் அதிகார சபையாக மாற்றவேண்டும்

## போக்குவரத்து துறை அமைச்சர்

கொழும்பு, ஜூன் 12

**புகையிரதத் திணைக்களத்தின் முறையற்ற நிர்வாகத்தால் சேவை பலவீனமடைந்துள்ளது. ரயில் சேவையை தனியார்மயப்படுத்த வேண்டாம் என்றால் சேவையை நிச்சயம் அதிகார சபையாக மாற்றிமைக்க வேண்டும். திணைக்களம் என்ற நிர்வாக கட்டமைப்புக்குள் இருந்து கொண்டு முன்னேற்றமடைய முடியாது என்று போக்குவரத்து துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

புகையிரத சாரதிகள் சங்கத்தின் வருடாந்த கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இதன்போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு, போக்குவரத்து சேவைத்துறையில் பல மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். இருப்பினும், மாற்றத்தை ஏற்படுத்த மானியம் போதாது. புகையிரத திணைக்களத்தின் வருமானம், செலவு முகாமைத்துவத்தில் நிலவும் பலவீனத்தன்மை திணைக்களம் நட்டமடைவதற்கு பிரதான காரணியாக உள்ளது. சிறந்த நிர்வாக கட்டமைப்பு இல்லாமல் நிறுவனத்தை முன்னேற்ற முடியாது.

பொது போக்குவரத்து சேவையில் நிலவும் பிரச்னைகளுக்கு ஜனாதிபதியுடன் ஒன்றிணைந்து அமைச்சரவை ஊடாக



தீர்வு காணத் தயாராகவுள்ளேன். குறுகிய அரசியல் நோக்கத்தை மையப்படுத்தி மேற்கொள்ளப்படும் தொழில்சங்க போராட்டங்களின் பங்குதாரர்களாக புகையிரத தொழில்சங்கங்கள் ஆளாகக் கூடாது என்பதை வலியுறுத்துகிறேன்.

புகையிரத சேவையை திணைக்களம் என்ற கட்டமைப்புக்குள் வைத்துக்கொண்டு ஒருபோதும் மேம்படுத்த முடியாது. திணைக்களம் எனும்போது வணிக நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது. துறைமுக அதிகார சபை, ரெலிகொம் நிறுவனம் ஆகியன அபிவிருத்தி அடைவதை போல் புகையிரத திணைக்களம் அபிவிருத்தியடைய வேண்டும்.

புகையிரத சேவையாளர்களின் தொழில் மற்றும் ஓய்வூதிய உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நிர்வாகக் கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுத்த அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. ரயில் சேவையை தனியார் மயப்படுத்த வேண்டாம் என்றால் நிச்சயம் புகையிரத சேவையை அதிகார சபையாக மாற்றியமைக்க வேண்டும். திணைக்களம் என்ற கட்டமைப்புக்குள் இருந்துகொண்டு முன்னேற முடியாது - என்றார்.



# சைவத் தமிழ் பண்பாட்டை உணர்த்திய ஒன்றுகூடல்!

யாழ்ப்பாணம், ஜூன் 12

நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டு கலைக்கூடலின் மாதாந்த செவ்வழி நயன நட்பெழுச்சி ஒன்றுகூடல் நல்லூர் மகேஸ்வரன் மணிமண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

காலை 8.00 மணி தொடக்கம் 9.00 மணிவரை நடைபெற்ற இந்த நிகழ்வில் வயது வேறுபாடின்றி பலரும் பங்கேற்றனர்.

இதன்போது மாலைகட்டுதல், கோலம் போடுதல், விவாத மேடைகள், சமய சுற்றுலா, தோரணம் கட்டுதல், பிரசாத வகைகள் தயாரித்தல், போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன.

மேலும் இந்நிகழ்வானது சைவசமய தமிழ் பண்பாட்டு விழுமியங்களையும், கலாசார கோட்பாடுகளையும் எமது எதிர்கால சந்ததியினருக்கு கடத்துவதற்கு ஊன்றுகோலாக அமையும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஐ-3)

# பஸ்மீது கல்வீசி தாக்குதல் 3 சிறுவர்கள் கைதாகினர்!

கொழும்பு, ஜூன் 12

அநுராதபுரம் நகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் பஸ் ஒன்றுக்கு சேதம் ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் மாணவர்களான மூன்று சிறுவர்கள் நேற்று காலை கைதுசெய்யப்பட்டனர்.

பரசங்கஸ்வெவ, ஆசிரிகம பிரதேசங்களில் வசிக்கும் 15 மற்றும் 17 வயதுடைய மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பஸ் மீது கல் வீசி தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் சாரதி பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த சிறுவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# அமைச்சு பதவியை ஏற்க நான் தயாராக இல்லை!

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 12

நிர்வாகத்தால் எடுக்கப்படும் சில கொள்கை தீர்மானங்களை தாம் ஏற்றுக்கொள்ளாததால், தற்போதைய அரசாங்கத்தின் கீழ் அமைச்சு பதவியை ஏற்கத் தயாராக இல்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சூழ்நிலையில் ஒரு துறையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறினார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன அடுத்த ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பதை தேர்தலுக்கு அண்மையாக அறிவிக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

ஒரு வருடத்துக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் நியமிக்கப்பட்டமை எவ்வாறு எதிர்பாராததோ அதேபோன்று அது நடந்துள்ளதாகவும், எதிர்காலத்தில் எதுவும் சாத்தியமாகும் - என்றார். (ஐ)

# கஞ்சாவுடன் சிப்பாய் கைது

கொழும்பு, ஜூன் 12

தனமல்விலை - ஹம்பேகமுவ பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 8 கிலோ 5 கிராம் கஞ்சாவை வைத்திருந்த சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பலாந்தோட்டை, மயூரபுர பொறியியல் சேவை படைப் பிரிவை சேர்ந்த 24 வயதான சிப்பாய் என தெரிய வந்துள்ளது.

இவர் கஞ்சாவை கடத்துவதற்காக வைத்திருந்தபோதே கைது செய்யப்பட்டார் என்று விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர். (ஐ)

# கஜமுத்துடன் வவுனியாவில் இரு சந்தேகநபர்கள் கைது!

வவுனியா, ஜூன் 12

மாங்குளம் விசேட அதிரடி படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா நகரில் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட திடீர் சோதனையின் போது, கஜமுத்து ஒன்று கைப்பற்றப்பட்டதுடன் சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுற்றிவளைப்பின் போது கார் ஒன்று சோதனைக்கு உட்படுத்தபட்டது. அதில் விற்பனை செய்வதற் கொண்டு செல்லப்பட்ட கஜமுத்து மீட்கப்பட்டது.

இதன்போது, காரில் இருந்த 26 ,23 வயதைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர். இவர்கள், தெஹியந்தர, ஹக்மன பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவித்த பொலிஸ் ஊடக பிரிவு மேலதிக விசாரணைகளுக்காக இவ்விருவரும், வவுனியா வனஜீவராசிகள் பாதுகாப்பு அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது. (ஐ)

# 75 இலட்சம் இலங்கையர்கள் உணவு பாதுகாப்பற்ற நிலையில்!

## பேராதனை பல்கலைக்ககழம்

கொழும்பு, ஜூன் 12

நாட்டில் சுமார் 75 இலட்சம் மக்கள் உணவு பாதுகாப்பற்ற நிலையை எதிர்கொண்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த தகவல் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்புடன் இணைந்து அண்மையில் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில மாகாணங்களில் சுமார் 88 வீதமான மக்கள் உணவு பாதுகாப்பற்ற நிலையை எதிர்கொண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த நாட்டில் உணவுப் பாதுகாப்பு வீழ்ச்சியடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# வீட்டில் இருந்தோரை மிரட்டி நகைகள், பணம் கொள்ளை

கிளிநொச்சி, ஜூன் 12

பளை - கொற்றாண்டகுளம் பகுதியில் வீடொன்றில் புகுந்த கும்பல் ஒன்று நகை, பணம் மற்றும் கைபேசிகளை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

வெள்ளிக்கிழமை நள்ளிரவு பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் பின்பக்க கதவை உடைத்து உட்சென்ற 6 பேர் கொண்ட குழு வீட்டில் இருந்தவர்களை தாக்கிவிட்டு நகை, பணம் மற்றும் கைபேசியை கொள்ளையிட்டுச் சென்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக பளை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# யானையின் சடலம் மாங்குளத்தில் மீட்பு

முல்லைத்தீவு, ஜூன் 12

மாங்குளம் - புலிமச்சிநாதகுளம் பகுதியில் உள்ள வயல்வெளியில் யானை ஒன்றின் சடலம் மீட்கப்பட்டது.

வயலை பார்வையிடச் சென்ற பிரதேசவாசிகள் உயிரிழந்த நிலையில் யானையை கண்டு, கிராம சேவகர் ஊடாக ஒட்டுசுட்டான் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு பிரதேசவாசிகள் தகவல் வழங்கியுள்ளனர்.

இதேவேளை உயிரிழந்தது ஒரு பெண் யானை என்றும் 30 - 35 வயது இருக்கலாம் எனவும், துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகியே இந்த யானை உயிரிழந்ததாகக் கூறப்படுகின்றது.

உயிரிழந்த யானையின் உடல் உடல் கூற்று பரிசோதனைக்காக நேற்று முன்தினம் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் முன்னிலையில் நடைபெற்றது. (ஐ)

# அதிர்ஷ்ட இலாப சீட்டு விலை இரு மடங்காக உயர்கின்றது!

கொழும்பு, ஜூன் 12

**அதிர்ஷ்ட இலாப சீட்டுகளின் விலையை இரண்டு மடங்கால் அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதனை, தேசிய லொத்தர் சபை, அபிவிருத்தி லொத்தர் சபை என்பன உறுதிப்படுத்தியுள்ளன.**

எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் லொத்தர் சீட்டு ஒன்றின் விலையை 40 ரூபாயாக அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்று அகில இலங்கை அதிர்ஷ்ட இலாப சீட்டு விநியோகஸ்தர்கள் சங்கத்தின் தலைவர் கிருஷாந்த கிரிஷாந்த மரம்பகே தெரிவித்தார்.

அதிர்ஷ்ட இலாப சீட்டு ஒன்றின் விலை தற்போது 20 ரூபாயாக உள்ள நிலையில் இது இரு மடங்கு அதிகரிப்பாகும்.

இந்த விலை அதிகரிப்புக்கு நிதி அமைச்சு ஒப்புதல் அளித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இதேவேளை, அதிர்ஷ்ட இலாப சீட்டுகளின் விலை அதிகரிக்கப்பட்டால், ஒரு சீட்டுக்கான விற்பனை முகவர்களுக்கு தற்போது வழங்கப்படும் 3.75 ரூபாய் தரகு பணம் 8 ரூயாக அதிகரிக்கப்பட வேண்டுமென கிருசாந்த சுட்டிக்காட்டினார்.

தரகு தொகையை எட்டு ரூபாயாக அதிகரிக்காவிட்டால் அதிர்ஷ்ட இலாப சீட்டுகளை விற்க முடியாத நிலை ஏற்படும் என்றும் அவர் கூறுகிறார். அதிர்ஷ்ட இலாப சீட்டுகளின் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமது தொழிற்சங்கம் போராட்டம் நடத்தி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விலையை அதிகரிப்பதில் அதிர்ஷ்ட இலாப சீட்டுகளை வாங்குபவருக்கும் ஆட்சேபனை இருப்பதாக அவர்களுடனான உரையாடலில் இருந்து தெரிய வருவதாக கிருஷாந்த மேலும் தெரிவித்தார். (ஐ)





# 2ஆம் சங்கிலி மன்னனின் நினைவுதினம் அனுஷ்டிப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 12

ஈழம் சிவசேனை அமையத்தின் ஏற்பாட்டில் மறவன்புலவு சச்சிதானந்தம் நெறிப்படுத்தலில் இரண்டாம் சங்கிலியன் மன்னனின் 404ஆவது நினைவுதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

நல்லூர் முத்திரை சந்தியில் அமைந்துள்ள சங்கிலியன் சிலை அருகே சங்கிலிய மன்னன் நினைவுக் குழுவின் தலைவர் பா. பாலகணேசன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன், மருதனார் மடம் சுந்தர ஆஞ்சநேயர் ஆலய தர்மகர்த்தா இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டு சங்கிலிய மன்னனின் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

இதைத் தொடர்ந்து சங்கிலியன் சிலையில் இருந்து ஊர்வலமாக சென்றவர்கள் சங்கிலியன் மன்னனால் கட்டப்பட்ட யமுனா ஏரியில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறை ஓய்வுநிலை விரிவுரையாளர் பேராசிரியர் ப. புஷ்பரட்ணம், மதத்தலைவர்கள், மாநகர ஊழியர்கள், கலைஞர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# அதிபர்கள் பிரச்னைக்கு தீர்வு; முன்மொழிவு அமைச்சரிடம்!

கொழும்பு, ஜூன் 12

அதிபர் பிரச்னைகளை தீர்ப்பதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவிடம் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த முன்மொழிவு ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

அதிபர் சேவை உத்தியோகத்தர்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்காக கல்வி அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட குழுவின் விசேட கலந்துரையாடல் அண்மையில் கல்வி அமைச்சில் இடம்பெற்றது.

அதிபர் சேவையில் நீண்ட காலமாக நிலவி வந்த சில முக்கிய பிரச்னைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

சம்பள முரண்பாடுகள், ஆட்சேர்ப்பு நடைமுறைகள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

இதுவரையில் குறித்த குழுவால் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, அடிப்படை பிரச்னைகளுக்கு குறுகிய கால தீர்வை விரைவில் காணுமாறு குழுவிற்கு பணிப்புரை விடுத்ததாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)



# பண்ணைப் பகுதியில் பொலிஸார் சிரமதானம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் ஏற்பாட்டில் பண்ணை சுற்றுவட்டார பகுதியை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுகள் ஏராளமாகக் காணப்பட்ட நிலையிலேயே இந்த தூய்மைப்படுத்தல் திட்டம் நேற்று மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபையினர் அந்தப் பகுதியை சுத்தப்படுத்த தவறியதையடுத்து மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் ஏற்பாட்டில் பொலிஸாரால் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

அந்தப் பகுதியில் பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுகள் பொலிஸாரால் சேகரிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட கழிவுகளை யாழ். மாநகர பகுதியினர் வாகனத்தில் சேகரித்து சென்றனர்.

நேற்று காலை 8 மணியளவில் ஆரம்பமான இந்த சிரமதானப் பணியில் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர், யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, யாழ்ப்பாண பொலிஸ் நிலைய உயர் அதிகாரிகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸார் பங்கேற்றனர். (ஐ-03)

## லெனின் மதிவானம் நினைவு பகிர்வு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 12

லெனின் மதிவானம் நினைவைப் பகிரும் நண்பர்களின் ஒன்றுகூடல் சுழிபுரம் கே. ஏ. எஸ். சத்தியமனை நூலக மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி முதல் மதியம் ஒரு மணி வரை நடைபெற்றது.

ஒன்றுகூடலில் 'ஒவ்வொருவரும் தத்தமது மனப்பதிவைப் பகிர்வோம்' என்ற லெனின் தொடர்பான காணொலி ஒன்றும், புதியவன் இராசையாவின் 'ஒற்றைப்பனைமரம்' திரைப்படமும் காட்சிப்படுத்தப்பட்டன.

இந்த நிகழ்வில் சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர். (ஐ)

# மருதங்கேணியில் விபத்து; இரண்டு பேர் காயம்!

வடமராட்சி, ஜூன் 12

மின்கம்பத்துடன் பிக்கப் வாகனம் மோதி ஏற்பட்ட விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு - கட்டைக்காடு பகுதியில் நேற்று இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மருதங்கேணியில் இருந்து கட்டைக்காடு நோக்கி சென்ற பிக்கப் வேக கட்டுப்பாட்டை இழந்து அருகில் உள்ள மின் கம்பத்துடன் மோதியது. விபத்தில் காயமடைந்த இருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ-02)

# கள்ளு விற்பனை நிலையத்தை மூடுமாறு கோரி போராட்டம்!

மன்னார், ஜூன் 12

மாந்தை மேற்கு - வேட்டையா முறிப்பு கிராமத்தில் அமைந்துள்ள கள்ளு விற்பனை நிலையத்தை இடமாற்ற கோரி மக்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கள்ளு விற்பனை நிலையத்தால் குடும்பங்களில் நிலவும் வன்முறைகள், சமூக சீர்கேடு, சிறுவர்கள் மது போதைக்கு அடிமையாதல் போன்ற பிரச்னைகளை கருத்தில்கொண்டு, பொறுப்பு மிகுந்த உரிய அதிகாரிகள் கள்ளு விற்பனை நிலையத்தை அப்பகுதியிலிருந்து இடம் மாற்றுமாறு கோரப்பட்டது.

போராட்ட இடத்துக்கு சென்ற அடம்பன் பொலிஸாரின் அழைப்பின் பேரில் சம்பவ இடத்துக்கு வந்த அடம்பன் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்க முகாமையாளர் மக்களின் பிரச்னைகளை கேட்டறிந்தனர். அத்துடன், கள்ளு விற்பனை நிலையத்தையும் மூட நடவடைக்கை எடுத்தனர்.

இதேசமயம், கள்ளு விற்பனை நிலையம் மூடப்படுவதால் தங்களது வாழ்வாதாரம் முற்றுமுழுதாக பாதிக்கப்படுவதாக 10இற்கும் மேற்பட்ட சீவல் தொழிலாளர்கள் கவலை தெரிவித்தனர். (ஐ)

# எல்லை நிர்ணய குழுவின் அறிக்கையை ஏற்க முடியாது!

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, ஜுன் 12

**தேசிய எல்லை நிர்ணய குழுவின் செயல்பாடுகளில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. எனவே, அதன் அறிக்கையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. புதிய எல்லை நிர்ணயத்துக்கமைய, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த இடமளிக்க முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.**

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கால வரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், புதிய எல்லை நிர்ணயத்துக்கமைய அரசாங்கம் தேர்தலை நடத்த முயற்சிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பில் வினவியபோது ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தலைமையிலான எல்லை நிர்ணய குழுவின் அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம், அந்தக் குழுவால் மேற்கொள்ளப்பட்டுள்ள எல்லை நிர்ணயம் தொடர்பில் பல தரப்பினராலும் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறிருக்கையில், அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமாயின், அது சட்டத்துக்கு முரணானதாகும்.

எனவே, அரசாங்கத்துக்கோ அல்லது தேர்தல் ஆணைக்குழுவுக்கோ உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு ஏற்கனவே கோரப்பட்டுள்ள வேட்பு மனுக்களை இரத்து செய்யவோ, வேட்பாளர்களிடம் கட்டுப்பணத்தை மீள செலுத்தவோ முடியாது.

சட்ட ரீதியில் அது இலகுவான விடயமல்ல. காரணம், புதிய எல்லை நிர்ணயத்தை பாராளுமன்றம் அங்கீகரிக்க வேண்டும். ஆனால், எந்தவோர் அரசியல் கட்சியும் அதனை ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இல்லை. அவ்வாறிருக்கையில், இது குறித்த சட்ட மூலத்தை எவ்வாறு நிறைவேற்ற முடியும்?

மாறாக, இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமையில் மீண்டும் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். அடுத்த ஒரு வருடத்தில் கூட இதனை செய்ய முடியாது. எனவே, வார்த்தைகளால் கூறுவதைப் போன்று அது இலகுவான விடயமல்ல. தேர்தல் ஆணைக்குழுவும் உண்மைகளை பகிரங்கமாக கூற முடியாத நிலையில் உள்ளது - என்றார். (ஐ)

# மின்சார கட்டணத்தை குறைக்கும் யோசனைகள் வெளியிடப்பட்டன!

கொழும்பு, ஜுன் 12

ஜுலை மாதம் மேற்கொள்ளப்படவுள்ள மின்கட்டண திருத்தத்தின் போது, குறைக்கப்படவுள்ள கட்டணத்தின் அளவு தொடர்பில் இலங்கை மின்சார சபை யோசனைகளை முன்வைத்துள்ளது.

இந்த நிலையில், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு குறித்த யோசனைகளை வெளிப்படுத்தியுள்ளது.

இதற்கமைய, 0 - 30 வரையான மின்சார அலகுகளை பயன்படுத்தும் நுகர்வோருக்கான மின் கட்டணம் 26.9 சதவீதத்தால் குறைக்கப்படும்.

31 முதல் 60 வரையான மின்சார அலகுகளை பயன்படுத்தும் நுகர்வோருக்கு 10.8 சதவீதமும், 61 முதல் 90 வரையான அலகுகளுக்கு 7.2 சதவீதமும் கட்டணம் குறைக்கப்பட வேண்டும்.

மின்சார சபையின் யோசனைக்கு அமைய, அதிகளவான மக்கள் பயன்படுத்தும் 91 முதல் 180 வரையான அலகுகளுக்கு 3.4 சதவீதம் கட்டணம் குறைக்கப்படும்.

180 அலகுகளுக்கும் அதிகமாக மின்சாரத்தை பயன்படுத்தும் நுகர்வோருக்கான கட்டணத்தை 1.3 சதவீதத்தால் குறைப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# 5 வயது சிறுவன் கொலை; தாத்தா முறையானவர் கைது

கொழும்பு, ஜுன் 12

வெட்டு காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட 5 வயது சிறுவனின் மரணத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் அந்த சிறுவனின் தாத்தா முறையான நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

இதேவேளை, சிறுவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் முன்னதாக கைது செய்யப்பட்ட சந்தேகநபர் எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த சிறுவன் தங்கியிருந்த இடத்தில் புல் வெட்டும் தொழிலாளியாக பணிபுரிந்த கொட்டாவை பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

# நிலத்தடி நீரின் தரம் குறைவால் ஏற்படும் பாதிப்பு குறித்து ஆய்வு



கொழும்பு, ஜுன் 12

நிலத்தடி நீரின் தரம் குறைவடைந்துள்ளதால் மக்களுக்கு சுகாதார ரீதியில் ஏற்படும் பாதிப்புகளை இனங்கண்டுகொள்வதற்கான ஆய்வு நடவடிக்கையை பரந்தளவில் மேற்கொள்வது தொடர்பிலும் தீர்வுகளை பெறுவது சம்பந்தமாகவும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஐ. நாவின் நிலையான அபிவிருத்தி இலக்குகளின் கீழ் நாட்டில் நீர் மற்றும் சுகாதாரத்தை உகந்த மட்டத்தில் பேணுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் தேசிய முயற்சியை வலுப்படுத்துவதகு அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கும் நோக்குடன், சீன ஆராய்ச்சி மற்றும் விஞ்ஞான அக்கடமியால் நாட்டில் பல விசேட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான விசேட கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை நீர் வழங்கல் சபையின் புதிய கட்டிடத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அதிதிகளாக சீன ஆராய்ச்சி மற்றும் அறிவியல் அக்கடமி பேராசிரியர் மின் யாங், பேராசிரியர் வெள்யுவான்சோங், பேராசிரியர் யாவெய் வாங்உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இலங்கையில் குடிநீரின் தரத்தை மேம்படுத்துவதற்காக உலகின் அதியுயர் தொழில்நுட்பத்தை வழங்கி, அனைத்து வசதிகளுடன் கூடிய ஆய்வு கூடங்கள், புதிய ஆராய்ச்சி சாதனங்கள், சுத்திகரிப்பு இயந்திரங்கள், இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்படுகின்ற சீனாவின் நடவடிக்கைக்கு அரசின் சார்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் நன்றிகளை தெரிவித்தார்.

சீன - இலங்கை கூட்டு நீர் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் எமது நாட்டில் நீர் வழங்கல் மற்றும் நிலத்தடி நீர் தொடர்பில் முன்னெடுக்கப்படும் ஆராய்ச்சிக்கு அரசாங்கம் முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்துடன், இலங்கையில் குடிநீரின் தரத்தை மேம்படுத்தல் மற்றும் அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கைக்கு இலங்கை மக்களின் சார்பில் சீனாவுக்கு அமைச்சர் நன்றி தெரிவித்தார். (ஐ)

# பல்கலைக்கழக கட்டமைப்பில் மீண்டும் மாற்றங்கள் வேண்டும்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, ஜுன் 12

இலங்கை பல்கலைக்கழகங்கள் அன்று ஆசிய பல்கலைக்கழகங்களின் பட்டியலில் முதன்மையான இடத்தில் காணப்பட்டன. அந்தத் தரம் மற்றும் நற்பெயரை இந்த நாட்டின் பல்கலைக்கழக கட்டமைப்பில் மீண்டும் ஏற்படுத்த வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் ஊடாக வெளிநாட்டு மாணவர்களையும் இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு ஈர்க்க முடியும் எனவும் அது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நிகழ்வில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் வருடாந்தம் சுமார் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் மாணவர்கள் உயர்கல்விக்கு தகுதி பெறுகின்றனர். அவர்களில் சுமார் 40 ஆயிரம் பேர் பல்கலைக்கழக அனுமதி பெறுகின்றனர். மேலும், 30 ஆயிரம் முதல் 40ஆயிரம் பேர் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு செல்கிறார்கள். ஆனால், பல்கலைக்கழகங்களுக்கு தகுதி பெறும் 40 ஆயிரம் பேருக்கு மேலதிகமாக மேலும் 25 ஆயிரம் அல்லது 30 ஆயிரம் பேரை இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்குவதற்கான பொறிமுறையொன்றை ஏற்படுத்த வேண்டும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் பல்கலைக்கழக கட்டமைப் பொன்று எம்மிடம் உள்ளது. அதேவேளை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கீழ் உள்வாங்கப்படாத பல்கலைக்கழகங்களும் உள்ளன. மேலும், இலாபம் ஈட்டும் மற்றும் இலாப நோக்கற்ற பல்கலைக்கழக கட்டமைப்பும் உள்ளது. எனவே, இந்த மூன்று முறைகளையும் நடைமுறைப்படுத்துவதா அல்லது ஒரு முறையை உருவாக்கி பல்கலைக்கழக கட்டமைப்பை மீட்டெடுப்பதா என்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

அதிகபட்ச எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு கல்வியை வழங்கக்கூடிய வழிமுறைகள் தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும். அன்று, ஆசிய பல்கலைக்கழகங்களின் பட்டியலில் நம் நாட்டுப் பல்கலைக்கழகங்கள் முதன்மை இடத்தில் இருந்தன. ஆனால், இன்று அந்த நிலை மாறிவிட்டது. எமது பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகளை மீண்டும் எவ்வாறு மேம்படுத்துவது என்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

நமது பல்கலைக்கழகங்களின் தரம் மற்றும் நற்பெயரை உலகுக்கு எவ்வாறு மீண்டும் உறுதிப்படுத்துவது என்பதை நாம் கண்டறிய வேண்டும். இதன் மூலம் உலகின் பிற நாடுகளைச் சேர்ந்த மாணவர்களை நமது பல்கலைக்கழகங்களுக்கு ஈர்க்க முடியும். நமது நாட்டின் பொருளாதாரத்துக்கு இது நல்லதொரு நிலை என்றே கூற வேண்டும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் இயங்காத பல்கலைக்கழகங்கள் தொழில் சந்தையை இலக்கு வைத்து செயற்படுவதால் பெருமளவிலான மாணவர்கள் அதன் பக்கம் திரும்பியுள்ளனர். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு மட்டுமன்றி, வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கும் இது பெரும் பிரச்னையாக மாறியுள்ளது. எனவே, இது தொடர்பில் ஏனையவர்கள் தீர்வுகளை வழங்குவார்கள் என்று காத்திருப்பதற்குப் பதிலாக, நாம், நமக்கு ஏற்ற தீர்வுகளை காண வேண்டும்.

தற்போதுள்ள பல்கலைக்கழகக் கட்டமைப்பை அப்படியே தொடர்வதா அல்லது தேவையான மாற்றங்கள் செய்வதா என்பதை நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

இந்நாட்டின் முதல் வதிவிடப் பல்கலைக்கழகமான பேராதனை பல்கலைக்கழகம், ஒக்ஸ்போர்ட் மற்றும் கேம்பிரிட்ஜ் கட்டமைப்பைக் கொண்டுள்ளது. ஆனால், தற்போதுள்ள நவீன பல்கலைக்கழகங்களில் அத்தகைய அமைப்பு காணப்படவில்லை. நாம் இந்த அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டும். இந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண கல்வி தொடர்பான அமைச்சரவைக் குழு ஒன்றையும் அமைத்துள்ளோம் - என்றார். (ஐ)

பிராங்க் கார்ட்னர்

# ரஷ்யா எதிர் உக்ரைன்: அணையைத் தகர்த்தது யார்?

தெற்கு உக்ரேனில் ரஷ்ய ஆக்கிரமிப்பு பகுதியில் அமைந்திருந்த மிகப்பெரிய அணை தகர்க்கப் பட்டுள்ளதால், அணையில் இருந்து தண்ணீர் வெள்ள மென பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருக்கிறது. இந்த நாசகார செயலால் யாருக்கு லாபம் என்ற கேள்வி எழுந் துள்ளது.

நோவா கக்கோவ்கா அணை உடைக்கப்பட்டது குறித்து ரஷ்யா, உக்ரேன் இருதரப்பும் ஒருவரையொரு வர் மாறி மாறி குற்றம்சாட்டி வருகின்றன. ஏற்கெனவே கடந்த ஆண்டு நோர்ட் ஸ்ட்ரீம் எரிவாயு குழாய் வெடிப்பு சம்பவத்தில் மேற்கத்திய நாடுகளின் சந்தேக பார்வை ரஷ்யா மீது விழுந்திருந்தது.

ஆனால், “இவ்விரு சம்பவங்களில் ரஷ்யாவுக்கு எந்த தொடர்பு இல்லை. நாங்கள் ஏன் இவ்வாறு செய்ய வேண் டும்?” என்று தங்கள் மீதான குற்றச்சாட்டை ரஷ்ய அரசு பகிரங்கமாக மறுத்தது. அத்துடன், “இதுபோன்ற குற்றச் சாட்டுகள் தங்களை காயப்படுத்துகிறது” என்றும் ரஷ்யா வருத்தம் தெரிவித்துள்ளது.

மேற்கு ஐரோப்பாவிற்கு இயற்கை எரிவாயுவை வழங் குவதற்காக ரஷ்யாவிலிருந்து ஜெர்மனி வரை, பால்டிக் கடலின் கீழ் செல்லும் இயற்கை எரிவாயு குழாய்களின் கட்டமைப்பே நோர்ட்ஸ்ட்ரீம்.

### ரஷ்யாவை பாதிக்கும் விஷயங்கள்

உக்ரேனின் குற்றச்சாட்டின்படி, கக்கோவ்கா அணையை ரஷ்யா உடைத்ததாக கருதினால், அதனால் தமக்குதான் பாதிப்பு என்பதை அந்த நாடு இரண்டு வழிகளில் சுட்டிக் காட்டலாம்.

முதலாவதாக, அணை உடைக்கப்பட்டுள்ளதன் விளை வாக, கெர்சன் மற்றும் அணை அமைந்துள்ள ‘டினிப்ரோ’ ஆற்றின் கரையோர பகுதிகளில் இருந்து ரஷ்ய துருப்புக ளையும், பொதுமக்களையும் கிழக்குப் பகுதி நோக்கி வெளியேற்ற வேண்டி வரும். அப்படியொரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் அது ரஷ்ய படையின் பீரங்கி மற்றும் ஏவுகணை தாக்குதலால் அன்றாடம் அவதியுற்று வரும் உக்ரேனின் கெர்சன் பகுதி குடியிருப்புவாசிகளுக்கு சாதகமாகவே அமையும்.

அடுத்து, அணையை உடைப்பதால் அதன் அருகில் இருக்கும் கால்வாயில் இருந்து ரஷ்ய ஆக்கிரமிப்பு தீப கற்ப பகுதியான கிரைமியாவுக்கு சென்று கொண்டிருக் கும் குடிநீர் விநியோகமும் பாதிக்கப்படலாம். கிரிமியா தீபகற்ப பகுதியை 2014ல் ரஷ்யா தன்னுடன் இணைத் துக் கொண்டது. அப்போதில் இருந்து, உக்ரேன் மற்றும் ரஷ்யா உரிமை கொண்டாடும் சர்ச்சைக்குரிய நிலமாக கிரைமியா தீபகற்பம் மாறி உள்ளது.

இப்படி இவ்விரு காரணங்களும் தங்களுக்கே வினை யாக அமையும் எனும்போது தாங்கள் ஏன் அணையை உடைக்கப் போகிறோம்? என்று ரஷ்யா நியாயம் கற்பிக் கலாம்.

### உக்ரேன் - ரஷ்யா போர் பின்னணி

ஆனால், இந்த அணை உடைக்கப்பட்டுள்ள நிகழ்வை, உக்ரேன் போரின் பின்னணியிலும் பார்க்க வேண்டிய அவசியம் உள்ளது. குறிப்பாக, ரஷ்ய படைகளுக்கு எதி ரான உக்ரேனின் கோடைகால எதிர்தாக்குதல் நடவடிக் கையின் பின்னணியிலும் இதனை பார்க்க வேண்டியுள் ளது.

உக்ரேன் ராணுவத்தின் இந்த எதிர்முனை தாக்குதல் வெற்றி பெற வேண்டுமானால், கிரைமியா தீபகற்பத்தை உக்ரேனின் கிழக்கு டோம்பாஸ் பிராந்தியத்துடன் இணைக்கும் பகுதி மீதான ரஷ்ய படையின் ஆதிக்கத்தை தளர்த்த வேண்டும்.

அத்துடன், ஜாபோரிசியாவின் தெற்குப் பகுதியிலும் ரஷ்ய படைகளின் ஆதிக்கத்தை சீர்குலைப்பதன் மூலம் அந்தப் பகுதியை இரண்டாக பிரிக்க முடியும். அதன் பயனாக, கிரைமியா தீபகற்ப பகுதியை தனிமைப்படுத்தி, அதனை கைப்பற்றும் ராணுவ நடவடிக்கையில் உக்ரேன் இறங்கலாம்.

### உஷாரான ரஷ்யா

ஆனால், கடந்த ஆண்டு பெப்ரவரி முதல் நடைபெற்று வரும் உக்ரேன் உடனான போரில் இருந்து ரஷ்யா நிறைய பாடங்களை கற்றுக் கொண்டுள்ளது. உக்ரேன் ராணுவம் எந்தப் பகுதிகளையெல்லாம் குறிவைத்து தாக்குதல் நடத்த வாய்ப்புள்ளது என்பதை ரஷ்யா அறிந்துள்ளது.



முக்கியமாக அசோவ் கடல் பகுதியை நோக்கி உக்ரே னிய படைகள் முன்னேறுவதை தடுக்கும் நோக்கில், கடந்த இரண்டு மாதங்களாக ரஷ்யா பல்வேறு தடைகளை உருவாக்கி வருகிறது.

ஆனால் ரஷ்ய துருப்புகள் குவிக்கப்பட்டுள்ள மேற் குப் பகுதிக்கு தமது படைகளை அனுப்ப உக்ரேன் திட் டமிட்டுள்ளதா என்பது உறுதியாக தெரியவில்லை. ரஷ் யாவை இப்படி யூகிக்க வைப்பதற்காக உக்ரேன் ராணு வம் இதுபோன்று புத்திசாலித்தனமாக செயல்படுவதாக தெரிகிறது.



# அணை உடைந்ததால் யாருக்கு இலாபம்?




தெற்கு உக்ரேன் பகுதியை அடைந்தபோது, டினிப்ரோ ஏற்கெனவே பரந்து விரிந்த ஆறாகவே இருந்தது.

ரஷ்யாவின் பீரங்கி, ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக் குதல்களின் கீழ், அதன் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள ரஷ்ய படைகளின் பாதுகாப்பு அரண், உக்ரைனுக்கு மிக வும் ஆபத்தான விஷயமாக பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், தற்போது டினிப்ரோ ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருந்த பெரிய அணை தகர்க்கப்பட் டுள்ளது. இதன் விளைவாக ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கால், கெர்சானுக்கு எதிரே அமைந்துள்ள இடது ( கிழக்கு) ஆற்றங்கரை பகுதிகள் முழுவதும் நீரில் முழ்கி உள்ளன. இதனால் அந்தப் பகுதிக்கு உக்ரேனிய படை கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

### அணை உடைப்பு வரலாறு

1941 இல் இரண்டாம் உலகப் போர் நடைபெற்று கொண்டிருந்தபோது, நாஜி படைகளின் முன்னேற்றத்தை தடுக்க, இதே டினிப்ரோ ஆற்றின் மீது கட்டப்பட்டிருந்த அணையை சோவியத் துருப்புகள் தகர்த்தன என்ற வர லாற்று பதிவும் இருக்கதான் செய்கிறது. அணை உடைந் ததன் விளைவாக, அடுத்தடுத்து ஏற்பட்ட வெள்ளத்தில் மூழ்கி ஆயிரக்கணக்கான சோவியத் குடிமக்கள் உயிரிழந் தனர் என்ற சோகக்கதையும் இந்த அணையின் பின்னால் உள்ளது.

தற்போது இந்த அணையை யார் உடைத்திருந்தாலும், அந்தச் செயல் தெற்கு உக்ரைன் பகுதியில் நிலைமையை சீர்குலைத்துள்ளது என்றுதான் சொல்ல வேண்டும். ரஷ்யா - உக்ரைன் என இருதரப்பிலும் போர் நடவடிக் கைகளில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தி உள்ளது. ரஷ்யா மீதான உக்ரே னின் நீண்டகால எதிர்தாக்குதல் திட்டத்தின் அடுத்தக் கட்ட நகர்வை அணை தகர்க்கப்பட்டுள்ள சம்பவம் தாம தப்படுத்தக்கூடும். ●

# மருதங்கேணியில் நடந்ததும் அதன் விளைவும்

நிலாந்தன்

புலனாய்வுத்துறை தமிழ்மக்களின் அரசியல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பது என்பது கடந்த பல தசாப்தகால யதார்த்தம். குறிப்பாக கடந்த 14 ஆண்டுகளாக தமிழ்க் கட்சிகள் மற்றும் செயற்பாட்டாளர்களின் எல்லா நடவடிக்கைகளையும் புலனாய்வுத்துறை கண்காணித்து வருகின்றது. அதை அவர்கள் நேரடியாகவும் செய்கிறார்கள்மறைமுகமாகவும் செய்கின்றார்கள். அச்சுறுத்தலாகவும் செய்கின்றார்கள்நாகரீகமாகவும் செய்கின்றார்கள். எதுவாயினும், தமிழ் மக்களைக் கண்காணிக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் மாற்றம் இல்லை. ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரும் நிலைமை அப்படித்தான் இருக்கிறது. தமிழ்மக்களை தொடர்ச்சியாகக் கண்காணிப்புக்குள் வைத்திருப்பது என்பது ஆக்கிரமிப்பு மனோநிலைதான்.

மருதங்கேணியிலும் அதுதான் நடந்தது. அதன் விளைவாக நடந்த கைது நடவடிக்கைகள் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியை அச்சுறுத்தும் நோக்கிலானவை. அண்மை மாதங்களாக முன்னணி அரசு படைகளோடும் போலீசாரோடும் நேரடியாக முட்டுப்படும் போராட்டக் களங்களைத் திறந்து வருகின்றது. இதனால் ஆத்திரமடைந்திருக்கும் அரசபடைகளும் காவல்துறையும், முன்னணிக்கு அதன் வரையறைகளை உணர்த்தும் நோக்கத்தோடு மேற்படி கைது நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கலாம். அக்கட்சியை அச்சுறுத்தி அதன் செயற்பாட்டாளர்களை தற்காலிகமாகவேனும் உள்ளே தள்ளுவதன்மூலம் அக்கட்சியை தொடர்ந்து போராடவிடாமல் தடுப்பது அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கலாம். இது ஏற்கனவே சிறீதரனுக்கும் நடந்தது, அவருடைய இரண்டு உதவியாளர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பிடிபட்டு பல மாதங்கள் சிறையில் இருந்தவர்கள்.

கடந்த 14 ஆண்டுகளாக ஆயுத மோதல்கள் இல்லை. எனினும் தமிழரசியல் அதிகம் ராணுவமயப்பட்டே காணப்படுகிறது. தமிழ்மக்கள் எந்த ஒரு போராட்டத்தை முன்னெடுத்தாலும் அரசபடைகளுக்கும் புலனாய்வுத்துறைக்கும், திணைக்களங்களுக்கும், பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக போராடவேண்டியிருக்கும். அவ்வாறு அரச படைகளோடு மோதி அல்லது முரண்பட்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் உள்ளே தள்ளுப்படுவதற்கு சாதாரண ஜனங்கள் அச்சப்படும் ஒரு சூழல்தான் இப்பொழுதும் உண்டு.

அண்மையில் தையிட்டியில் விகாரைக்கு எதிரான போராட்டத்தில் கஜேந்திரன் தனி ஒருவராக புதர்களின் மத்தியில் தரையில் உறங்கும் காட்சி அவருடைய ஆதரவாளர்களால் அதிகம் பகிரப்பட்டது. அவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். இருபதாயிரத்துக்கும் குறையாத வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவர். அவர் ஏன் அங்கே தனியாக நிலத்தில் உறங்க வேண்டும்? அவருக்கு வாக்களித்த மக்களும் அந்த கட்சியின் ஆதரவாளர்களும் எங்கே? அது உயர் பாதுகாப்பு வலையத்தை அண்மித்த பகுதி. அங்கே சென்று போராடினால் கைது செய்யப்படலாம் என்ற நிலைமை உண்டு. அவ்வாறு போராடிய கட்சிக்காரர்களை பலாலி போலீஸ் கைதுசெய்து பின் விடுவித்தது. சட்டத்தரணிகளையும் விட்டுவைக்கவில்லை.போராடப் போனால் கைது செய்யப்படலாம் என்ற ஒரு நிலையை ஏற்படுத்துவதே போலீசின் நோக்கம்.

மருதங்கேணிச் சம்பவத்திலும் ஒரு புலனாய்வாளர் தன்னைத் தடுக்கமுயன்ற கஜேந்திரக்குமாரைத் தட்டிவிட்டுத் தப்பியோடுகிறார். அவரை இரண்டு கட்சிக்காரர்கள் தான் துரத்திக்கொண்டு போகிறார்கள். ஏனைய பொது மக்கள் குறிப்பாக, சந்திப்பில் கலந்துகொண்ட விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் அவரைத் துரத்திக் கொண்டு போகத் துணியவில்லை.

அது ஒரு தமிழ் யதார்த்தம். அரச படைகள் மற்றும் போலீஸ், புலனாய்வுத்துறை போன்றவற்றோடு நேரடியாக மோத சாதாரண தமிழ்மக்கள் பயப்படுகிறார்கள். ஏன் அதிகம்போவான், நினைவு நாட்களின்போது எல்லா ஆலய மணிகளையும் அடிக்குமாறு கேட்கப்படுகிறது. ஆனால் எல்லா கோவில்களிலும் மணி அடிக்கப்படுவதில்லை. எல்லா வீடுகளிலும் வெளிப்படையாக ஒரு சுட்டிகூட ஏற்றப்படுவதில்லை. கட்சி அலுவலகங்களில் மட்டுந்தான் வெளிப்படையாக நினைவுச்சுடர் ஏற்றப்படும். சாதாரண ஜனங்கள் அவ்வாறு ஒரு சுட்டியை ஏற்றுவதற்குக்கூட பயப்படும் ஒரு நிலை.

அந்த அச்சத்தைப் போக்குவதென்றால் மக்களைத் திரளாக்க வேண்டும். உதிரியாக இருக்கும்வரைதான் அச்சமிருக்கும். ஆனால் பெரிய திரளாகக் கூடினால் எத்தனை பேரைத் தூக்குவது? போராட்டம் என்றாலே சட்டமறுப்புத்தான். சிறைகளை நிரப்புவதுதான். பொது மக்கள் அதிகமாகக் குவியும்போது எல்லாரையும் தூக்கி உள்ளே போடமுடியாது. உதிரியாகப் போராடும்போது தான் தனித்தனியாகத் தூக்கி உள்ளே போடலாம். திரளாகக் குவிந்தால் முழுச் சமூகத்தையும் உள்ளே தூக்கிப் போட முடியாது. உதிரிகளாக இருக்கும்வரை மக்கள் பயப்படுவார்கள். திரண்டால் அதுதான் பலம். திரட்சி தான் பயத்தைப் போக்கும். தைரியத்தை உருவாக்கும். எனவே மக்கள் எந்தளவுக்கு எந்தளவு தங்களுடைய சௌகரிய வலையத்தை விட்டு வெளியே வருகிறார்களோ, அந்தளவுக்கு அந்தளவு போராட்டம் மக்கள் மயப்படும். ஆனால் தமிழ்க் கட்சிகளிடம் அதற்குரிய பொருத்தமான வேலைத்திட்டங்கள் இல்லை. அவ்வாறான ஒரு பின்னணியில்தான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனியாக அரசு தரப்புடன் முட்டுப்பட வேண்டி வருகிறது.

மக்கள்முன்னணி அந்தப் பயத்தை உடைத்துக்கொண்டு போராட முயற்சிக்கின்றது. அதில் தனிமனித சாகசம் இருக்கலாம். எனினும், அக்கட்சிக்கு ஒரு தட்டுத் தட்டி அடக்க வேண்டும் என்று அரசாங்கம் சிந்தித்ததன் விளைவே மேற்படி கைது நடவடிக்கை. எல்லாவிதமான விமர்சனங்களுக்கும் அப்பால் தமிழ் அரசியலை அண்மை மாதங்களாக நொதிக்கச் செய்வது முன்னணிதான்.

**சரிக்கும் பிழைக்கும் அப்பால் முன்னணி தமிழ் அரசியலை நொதிக்கச் செய்கின்றது. இது அக்கட்சியின் ஆதரவுத் தளத்தை பலப்படுத்தும். முன்னணி பயப்படாமல் போராடுகிறது. அந்த முன்னுதாரணத்தை பின்பற்றி மக்கள் திரளக்கூடாது என்று சிந்தித்தே அரசாங்கம் முன்னணியின் முக்கியஸ்த்தர்கள் மீது கைவைத்தது.**

அதேசமயம், மருதங்கேணிச் சம்பவத்தின் பின்னணியில் அக்கட்சியின் அரசியல் எதிரிகளும் கட்சியின் தூய்மைவாத நடவடிக்கைகளால் எரிச்சல் அடைந்தவர்களும் பின்வரும் விமர்சனங்களை முன்வைக்கின்றார்கள். அது ஒரு நாடகம், முன்னணி வேண்டுமென்று முரண்பாடுகளை தோற்றுவிக்கின்றது, அதன்மூலம் தன்னுடைய ஆதரவுத் தளத்தைப் பலப்படுத்த முயற்சிக்கின்றது என்பது ஒரு பகுதியினரின் விமர்சனம். இன்னொரு பகுதியினர் முன்னணியைப் பலப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு அரசாங்கம் மேற்படி கைது நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பதாக விளக்கம் அளிக்கிறார்கள். இந்தியாவை எதிர்க்கும் ஒரு கட்சியை பலப்படுத்தினால் தமிழ் மக்கள் மத்தியில் இந்திய எதிர்ப்பை நிறுவனமயப்படுத்தலாம். அதனால் அரசாங்கத்தின் வேலை இலகுவாக்கப் பட்டு விடும். இரண்டாவதாக, தனது தூய்மைவாத நடவடிக்கைகளால் ஏனைய கட்சிகளோடு இணைய மறக்கும் முன்னணியானது தமிழ் ஐக்கியத்துக்கு ஏதோ ஒரு விதத்தில் தடையாகக் காணப்படுகின்றது. எனவே அக்கட்சியை



பலப்படுத்தினால் அது தமிழ்த் திரட்சியைப் பலவீனப்படுத்தும் என்று அரசாங்கம் சிந்திப்பதாக ஒரு விளக்கம்.

இவைதவிர, இக்காலப் பகுதியில் ஒரு பேப்பர் கட்டிங் முன்னணியின் அரசியல் எதிரிகளால் அதிகமாக பகிரப்பட்டு வருகிறது. அது விடுதலைப்புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட காலகட்டம் ஒன்றில் அது தொடர்பாக டெலோ இயக்கமும் குமார் பொன்னம்பலமும் தெரிவித்த கருத்துக்களைக் கொண்ட ஒரு செய்திக் குறிப்பு. குமார் பொன்னம்பலம் புலிகள்இயக்கம் தடை செய்யப்பட்டமையை ஆதரித்து கருத்து தெரிவித்திருக்கிறார். முன்னணியை விமர்சிக்கும் தரப்புகள் குமார் பொன்னம்பலத்தின் விசுவாசத்தைக் கேள்விக்கு உள்ளாக்கும் நோக்கத்தோடு மேற்படி பேப்பர் கட்டிங்கைப் பகிர்ந்து வருகிறார்கள்.

கடந்த 14 ஆண்டு கால தமிழ் அரசியலில் விகாரமாக மேலெழுந்து வரும் ஒரு போக்கு இது. தமது அரசியல் எதிரிகளுக்கு எதிராக சூழ்ச்சிக் கோட்பாடுகளை உருவாக்குவது. முன்பு மொட்டைக்கடிதம் இருந்தது. இப்பொழுது புனை பெயரில் முகநூல் கணக்கு உள்ளது. தமக்குத் தெரியாத ஒன்றைப் பற்றி கருத்துக்கூறும் சுதந்திரத்தையும் துணிச்சலையும் சமூகவலைத்தளங்கள் அதிகப்படுத்தியுள்ளன. அதனால் யானை பார்த்த குருடர்கள் எல்லாம் விமர்சகர்கள் ஆகிவிட்டார்கள். அவர்கள் ஒரு கூட்டமாகச் சேர்ந்து சமூக வலைத்தளங்களில் தமது அரசியல் எதிரிகளின் மீது அவதூறை அள்ளி வீசுகிறார்கள். குமார் பொன்னம்பலம் சம்பந்தப்பட்ட பேப்பர் கட்டிங்கை பரவலாக்குவதும் அதே சீரழிந்த விமர்சனப் பண்பாட்டின் ஒரு வெளிப்பாடுதான்.

ஆனால் அந்த விமர்சனப் பண்பாட்டை வளர்த்தெ



டுத்ததில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கும் பெரிய பங்கு உண்டு. தமது அரசியல் எதிரிகளை இனத்துரோகிகளாக உருவகிப்பதன்மூலம் அவர்களின் ஆளுமையை சிதைக்கும் ஒரு அரசியல் விமர்சனப் பண்பாட்டை அக்கட்சிதான் அதிகமதிகம் முன்னெடுத்து வருகின்றது. யாராவது தமக்கு எதிராக எழுதினால்“சோறு முக்கியம்” “அவர்களுக்குப் பசிக்குந்தானே” என்றெல்லாம் எழுதுவது அந்த கட்சிக்காரர்கள்தான். அரசியல் விமர்சகர்களை சில ஆயிரம் ரூபாய்க்கு கட்டுரை எழுதுபவர்கள் யுடியூப்பில் உழைப்பவர்கள் என்று எழுதுவதும் அந்தக் கட்சிக்காரர்கள்தான். தமிழ் அரசியலில் விமர்சனத்தை அவதூறாக மாற்றியதில் அக்கட்சிக்குப் பெரிய பங்குண்டு. இப்பொழுது அதேவிதமான அவதூறு அவர்கள் மீதும் அள்ளிவீசப்படுகிறது.

குமார் பொன்னம்பலம் சம்பந்தப்பட்ட அந்த பேப்பர் கட்டிங்கில் இருப்பது உண்மையா பொய்யா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். சிலவேளை, அச்செய்தி உண்மையாக இருந்தாலும், அதை மட்டும் வைத்து குமார் பொன்னம்பலத்தை மதிப்பிட முடியாது. அவருடைய வாழ்க்கையை முழுமையாகத் தொகுத்துப் பார்க்க வேண்டும். அந்த பேப்பர் கட்டிங்கில் காணப்படும் செய்தி உண்மையாக இருந்தால் அது அவருடைய ஒரு காலகட்ட அரசியல் நிலைப்பாடு என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் பிறகு ஒரு காலம் அவருடைய வேறொரு அரசியல் நிலைப்பாட்டுக்காகவே அவர் கொல்லப்பட்டார். அந்த நேரத்தில் அவர் தனது கொழும்பு மைய வாழ்க்கையை, தன்னுடைய சொத்துக்களை பாதுகாக்கும் ஓர் அரசியல் நிலைப்பாட்டை எடுத்திருந்திருந்தால் அவர் தன் உயிரை பாதுகாத்து இருந்திருக்கலாம். ஒரு மூத்த வாக்காளர் கூறினார் “ஜி.ஜி.பொன்னம்பலம் பெற்றெடுத்த ஒரு செல்வநாயகந்தான் குமார் பொன்னம்பலம்” என்று.

தமிழ் அரசியலில் சட்டச் செயற்பாட்டாளர்கள் என்று பார்த்தால், குறிப்பாக பயங்கரவாத தடைச்சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களிடம் ஒரு சதம்கூட வாங்காமல் வழக்காடியவர் என்று பார்த்தால், குமார் பொன்னம்பலத்தின் வாழ்வு பெரியது. மனிதர்களை அவர்களுடைய தொகுக்கப்பட்ட வாழ்க்கைக்குள்ளால்தான் நிறுக்கலாம். ஒரு மனிதருடைய ஒரு காலகட்ட நிலைப்பாட்டை மட்டும் வைத்து நிறுக்க முடியாது. எதிலும் ஒரு தொகுக்கப்பட்ட முழுமையான பார்வை அவசியம். தமிழ் அரசியலில் ஒருவர் தனது துறைசார்ந்து அதிகமாகத் தொண்டு செய்தாரா அல்லது தொழில் செய்தாரா என்று பார்க்க வேண்டும். இது குமார் பொன்னம்பலத்துக்கும் பொருந்தும். முன்னணியால் கேவலமாகவும் கீழ்த்தரமாகவும் விமர்சிக்கப்பட்டவர்களுக்கும் பொருந்தும்.

எனினும், சரிக்கும் பிழைக்கும் அப்பால் முன்னணி தமிழ் அரசியலை நொதிக்கச் செய்கின்றது. இது அக்கட்சியின் ஆதரவுத் தளத்தை பலப்படுத்தும். முன்னணி பயப்படாமல் போராடுகிறது. அந்த முன்னுதாரணத்தை பின்பற்றி மக்கள் திரளக்கூடாது என்று சிந்தித்தே அரசாங்கம் முன்னணியின் முக்கியஸ்த்தர்கள் மீது கைவைத்தது. அதன்மூலம் தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள் அரச படைகளோடும் புலனாய்வுத் துறையோடும் காவல்துறையோடும் முட்டுப்படுவதில் உள்ள வரையறைகளை, ஆபத்தை உணர்த்துவதே அரசாங்கத்தின் நோக்கம்.

மேற்படி கைது நடவடிக்கைகளின்மூலம் ரணில், சிங்களபௌத்த உணர்வுகளைத் திருப்திபடுத்தலாம். அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலை நோக்கி அவர் உழைக்கின்றார். தாமரை மொட்டின் ஆதரவோடு அவர் களமிறங்கினால்,தமிழ்வாக்குகள் அவருக்கு கிடைக்காது என்று அவர் அஞ்சக்கூடும். எனவே முழுக்கமுழுக்க சிங்களமக்களின் வாக்குகளில் தங்கியிருப்பது என்று முடிவெடுத்தால், தமிழ் அரசியல் வாதிகளில் கை வைக்க வேண்டும்.மேலும் ஐ.எம்.எஃப்பின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் பொழுது சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய கொதிப்பைத் திசை திருப்பவும் மேற்படி கைது நடவடிக்கைகள் அவருக்கு உதவும்.

# அம்பாறை மக்கள் பிரச்னைக்கு தீர்வு ஆளுநர் தலைமையில் நடமாடும் சேவை

அக்கரைப்பற்று, ஜூன் 12

அம்பாறை மாவட்ட மக்களின் பிரச்னைகளுக்கு “உரிய இடத்தில் தீர்வு” வழங்கும் நோக்கில், நடமாடும் சேவை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் இடம்பெறவுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஏ. எஸ். எம். பாயிஸ் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, ஆளுநர் செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நடமாடும் சேவை இன்று திங்கட்கிழமை காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள பொதுமக்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்னைகளை இன்றைய தினம் தெரிவிக்க முடியும். இந்தப் பிரச்னைகளுக்கு விடயங்களுடன் தொடர்புடைய மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மீளாய்வு செய்யப்பட்ட பின்னர், அவர்களுக்கான தீர்வு ஆளுநரால் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் பொது மக்களின் பிரச்னைகளுக்கு மாத்திரமே தீர்வு வழங்கப்படவுள்ளதால், அரச ஊழியர்களின் இடமாற்றம் தொடர்பான எந்தப் பிரச்னைகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம். பாயிஸ் சுட்டிக்காட்டினார்.

(ஐ)

# மதுபோதையில் பயணிகள் பேருந்தை செலுத்திச் சென்ற சாரதி கைதானார்!

கொழும்பு, ஜூன் 12

82 பயணிகளை ஏற்றிய பேருந்தை மதுபோதை மற்றும் செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி அதிவேகமாக செலுத்திச் சென்ற சாரதி ஒருவரை கேகாலை பிரிவு போக்குவரத்து பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கம்பஹா கிரிடிவெல்ல டிப்போவுக்குகு சொந்தமான பேருந்து கொழும்பில் இருந்து கண்டி நோக்கி பயணித்தபோது, யத்தோகம பகுதியில் வைத்து கேகாலை பொலிஸ் பிரிவில் வைத்து பொலிஸாரால் பிடிக்கப்பட்டுள்ளது.

அந்த சாவீதியில் அதிகபட்சமாக மணிக்கு 60 கி. மீ. வேகத்தில் பயணிக்க முடியும். எனினும், 77 கி. மீ. வேகத்தில் பேருந்தை செலுத்திச் சென்றுள்ளார்.

மேலும், அவரின் சாரதியின் உரிமத்தை சோதனை செய்ததில், அது காலாவதியான ஓட்டுநர் உரிமம் என்பதும், அது புதுப்பிக்கப்படவில்லை என்பதும் தெரிய வந்தது. அத்துடன், சாரதி குடிபோதையில் இருந்ததும் தெரியவந்துள்ளது.

அப்போது, பேருந்தில் 82 பயணிகள் இருந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரிட்டன், பிரான்ஸ் பயணமாகிறார்

கொழும்பு, ஜூன் 12

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர்வரும் 17ஆம் திகதி பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு உத்தியோக பூர்வ பயணம் மேற்கொள்ளவுள்ளார். இந்தப் பயணத்தின் போது, ஜனாதிபதி பாரிஸ் கிளப் உறுப் பினர்களை சந்திக்க திட்டமிட்டுள்ளார் என்று தெரிய வருகின்றது.

இலங்கையின் கடன் நெருக்கடிக்கான தீர்வு மற்றும் கடன் ஸ்திரத்தன்மைக்கு ஆதரவளிப்பதாக பாரிஸ் கிளப் முன்னதாக அறிவித்திருந்தது.

இந்தநிலையில், இந்தப் பயணத்தின்போது இலங்கையின் எதிர்கால கடன் மறுசீரமைப்பு பணிகள் குறித்தும் ஜனாதிபதி கலந்துரையாடவுள்ளதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பை மாற்ற நடவடிக்கை

வஜிர அபேவர்த்தன

கொழும்பு, ஜூன் 12

நாட்டுக்கு பலம் மிக்க தலைமைத்துவத்தை வழங்கும் பிரதான நடவடிக்கையாக ஐக்கிய தேசிய கட்சியின் யாப்பை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க இருக்கிறோம் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

காலி ஹபராதுவ ஐக்கிய தேசிய கட்சி தொகுதி அதிகார சபை கூட்டம் ஞாயிறு இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

நாட்டுக்கு பலம் மிக்க தலைமைத்துவத்தை வழங்கும் பிரதான நடவடிக்கையாக ஐக்கிய தேசிய கட்சியின் யாப்பை மாற்றுவதற்கு எதிர்பார்க்கிறோம். எதிர்வரும் ஜூலை மாதத்தில் கட்சி சம்மேளனத்தை கூட்டி, இது தொடர்பாக கலந்துரையாடி யாப்பை மாற்ற இருக்கிறோம்.

அத்துடன், ஐக்கிய தேசிய கட்சியின் யாப்பை மாற்றியதன் பின்னர் நாட்டில் அரசமைப்பையும் மாற்ற வேண்டும். ஏனெனில், பொருளாதார ரீதியில் வீழ்ந்திருக்கும் நாட்டை கட்டியெழுப்புவதாக இருந்தால் பலம் மிக்க கட்சி யாப்பு மற்றும் அரசியல் அமைப்பு தேவையாகும்.

1987ஆம் ஆண்டில் ஐக்கிய தேசிய கட்சியின் யாப்புக்கு முரணான வகையில் அரசமைப்பு திருத்தம் மேற்கொள்ளப்பட்டதன் பெறுபேறாக ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆட்சி அதிகாரம் இல்லாமல் போனது.

விருப்பு வாக்கு முறைமையை அறிமுகப்படுத்தியது ஜே. ஆர். ஜெயவர்த்தனவே என சிலர் அறியாமல் தெரிவித்து வருகின்றனர். அது பிழையான கருத்தாகும். மாறாக, விருப்பு வாக்கு முறையை அறிமுகப்படுத்தியது முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவே -என்றார்.

# யுவதியை வீடு புகுந்து தாக்கிய பொலிஸ் சார்ஜன்ட் கைதானார்

கொழும்பு, ஜூன் 12

வீடு ஒன்றுக்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த யுவதி ஒருவரைத் தாக்கி காயப்படுத்தி வீட்டின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் மொரந்துடுவை பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் அவரது மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளதாக களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வஸ்கடுவ பகுதியில் வசிக்கும் யுவதி ஒருவர் செய்த முறைப்பாட்டுக்கமைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மே மாதம் 18 ஆம் திகதி இரவு சந்தேக நபர்களான சார்ஜன்டும் அவரது மனைவியும் குறித்த யுவதியின் வீட்டுக் குள் அத்துமீறி நுழைந்து இந்த தாக்குதலை நடத்தியிருந்தனர். (ஐ)






ஈழநாடு



# கதிர்காமம் ஆலயம் செல்வதற்கான காட்டு பாதை இன்று திறக்கப்படும்

காரைதீவு, ஜூன் 12

**வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழாவுக்கு செல்லும் பாதயாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதை இன்று திங்கட்கிழமை காலை சம்பிரதாய பூர்வமாக திறக்கப்படும். மீண்டும் அது ஜூன் 25 ஆம் திகதி மூடப்படும்**

கதிர்காமம் முருகன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் ஜூன் 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜூலை மாதம் 4 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

கதிர்காமம் ஆலயத்துக்கு கடந்த வருடம் 28 ஆயிரத்து 820 பேர் காட்டுப் பாதையில் பயணித்திருந்தனர். இந்தமுறை 45 ஆயிரம் பேர் அளவில் பயணிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, உகந்தை மலை முருகன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் ஜூலை 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஓகஸ்ட் 02 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையும். (ஐ)



# கிழக்கு ஆளுநர் செந்தில் மட்டக்களப்புக்கு வருகை

மட்டக்களப்பு, ஜூன் 12

மட்டக்களப்புக்கு வந்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வாகரை - மாங்கேணியில் அமையப் பெற்றுள்ள கெக்கரிக்காய் பதனிடும் தொழில்சாலையை நேரில் பார்வையிட்டார். அவருடன், இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் விவசாய அமைச்சின் உயர் அதிகாரிகளும் வருகை தந்திருந்தனர்.

நாட்டுக்கு அதிகளவு அந்நிய செலவாணியை பெற்றும் தரும் வர்த்தமாகவும் பெரும் இலாபம் ஈட்டித் தரும் பயிர்செய்கையாகவும் பச்சை கெக்கரிக்காய் செய்கை வாகரை பிரதேசத்தில் செய்கை பண்ணப்படுகிறது. இது 45இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கெக்கரிக்காய் பயிர்ச் செய்கையை மேலும் விரிவாக்கம் செய்யவும் தொடர்ந்து தொழிற்சாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறும் இதன்போது ஆளுநரிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

(ஐ)

# உயர்தர தனியார் வகுப்புகளை தாமதமாக ஆரம்பிக்க உத்தரவு

## கல்முனை மாநகர ஆணையாளர் விடுத்தார்

கல்முனை, ஜூன் 12

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் க. பொ. த. உயர்தர மாணவர்களுக்கான புதிய மேலதிக வகுப்புகளை உடனடியாக ஆரம்பிக்காமல், இந்த மாத இறுதிவரை தாமதப்படுத்துமாறு கல்முனை மாநகர ஆணையாளர் ஏ. எல். எம். அஸ்மி வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அனைத்து தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள், முகாமையாளர்கள் மற்றும் ஆசிரியர்களை அறிவுறுத்தி அவர் வெளியிட்டுள்ள விசேட அறிவித்தலில் மேலும் தெரிவித்திருப்பதாவது

பல்வேறு அர்ப்பணிப்புகள் மற்றும் சிரமங்களுக்கு மத்தியில் க.பொ.த சாதாரணதர பரீட்சையை நிறைவு செய்திருக்கின்ற மாணவர்களும் பெற்றோர் மற்றும் கல்விச் சமூகத்தினரும் எம்மிடம் சுட்டிக்காட்டியமைக்கு அமைவாக, சில தனியார் கல்வி நிறுவனங்களால் க.பொ.த உயர்தரத்துக்கான மேலதிக வகுப்புக்



களை மிக அவசரமாக ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதாக அறிய முடிகின்றது.

உயர்தர கல்விக்கான தத்தமது துறைகளை தேர்வு செய்வதற்காக மற்றும் உரிய தயார்படுத்தல்களுக்காக மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் போதிய கால அவகாசமும் சுதந்திரமும் வழங்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

எனவே, மேற்கூறப்பட்ட காரணங்களின் அடிப்படையில் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்கள் அனைத்தும் எதிர்வரும் 2023.06.30ஆம் திகதி வரை இந்த வகுப்புகளை ஆரம்பிக்காது இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இது தொடர்பில் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடனான வியாபார உத்தரவுப் பத்திரத்தின்பால் கவனம் செலுத்துமாறும் தவறும் பட்சத்தில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் தங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நேரிடும் என்பதையும் மிகவும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்- என்று கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ-06)

# ஊடகவியலாளர்களுக்கான பயிற்சி கருத்தரங்கு நடந்தது



அக்கரைப்பற்று, ஜூன் 12

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட டிஜிற்றல் ஊடகம் குறித்த ஊடகவியலாளர்களுக்கான பயிற்சி கருத்தரங்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் வசந்த சந்திரபால தலைமையில் ஆரம்பமான இந்த கருத்தரங்கில் டிஜிற்றல் ஊடக தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெற்ற ஜெயசிறி ஜெயசேகர, மெத்லால் வீரசூரிய, முதலானோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கருத்தரங்கில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

(ஐ)

# இன நல்லிணக்கம் வேண்டி கதிர்காமத்துக்கு பாத யாத்திரை!

காரைதீவு, ஜூன் 12

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் முதல் தடவையாக நிலையான சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்பும் நோக்கில் கதிகாமத்துக்கான பாதயாத்திரையை நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கவுள்ளனர்.

மட்டக்களப்பில் இருந்து ஆரம்பமாகும் இந்த பாத யாத்திரையில் நாடு முழுவதும் இருந்து 170 இளைஞர், யுவதிகள் பங்கேற்கவுள்ளனர்.

இவர்கள் அனைவரும் இன்று திங்கட்கிழமை மாலைக்கு முன்னர் மட்டக்களப்பு மாமாங்கம் பிள்ளையார் ஆலயத்திற்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மாமாங்க பிள்ளையார் ஆலயத்தில் நாளை ஆரம்பமாகும் இந்தப் பாத யாத்திரையை தேசிய இளைஞர் சேவை மன்ற தலைவர் பசிந்து குணரட்ன, நிர்வாக பணிப்பாளர் சமல், கிழக்கு மாகாண பணிப்பாளர் சரத் சந்திரபால, மாவட்ட உதவிப்பணிப்பாளர் திருமதி ஜேசுதாசன் கலாராணி, மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் திருமதி நிலந்தி அருள்மொழி, அம்பாறை மாவட்ட உதவி பணிப்பாளர் திருமதி கங்கா உள்ளிட்டவர்கள் ஆரம்பித்து வைப்பார்கள்.

இவர்களுக்கான காவி உடைகள், ருத்ராட்ச மாலை என்பவற்றை மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவை தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் வழங்கி வைக்கவுள்ளார்.

பாதயாத்திரையின் போதான சகல உணவு வகைகளையும் இலவசமாக வழங்க சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி ஏற்பாடு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# யாழ். கதிர்காம யாத்திரை குழு உகந்தைமலையை அடைந்தது

காரைதீவு, ஜூன் 12

யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமத்துக்கான பாத யாத்திரையில் ஈடுபடும் குழுவினர் 35 தினங்களில் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை உகந்த மலை முருகன் ஆலயத்தை வந்தடைந்தனர்.

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காமஆடிவேல்விழா உற்சவத்தை ஒட்டி இலங்கையின் மிகநீண்ட யாழ்ப்பாணம் கதிர்காம பாதயாத்திரை இம் முறை ஜெயா வேல்சாமி தலைமையில் கடந்த மாதம் ஆறாம் திகிதி தொண்டைமானாறு செல்வச் சந்நதியிலிருந்து ஆரம்பமானது.

வடக்கு, கிழக்கு ஊவா ஆகிய 3 மாகாணங்களையும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை 7 மாவட்டங்களையும் இணைத்து 55நாட்களில் 98 ஆலயங்களைத் தரிசித்து 815கிலோமீற்றர் தூரத்தை நடந்துகடக்கும் இந்தப் புனித பாதயாத்திரை இலங்கையின் மிகமிகநீண்ட தூர கதிர்காம பாதயாத்திரையாக கருதப்படுகின்றது.

ஆனால் இம்முறை கதிர்காமம் ஆடிவேல்விழா உற்சவ காலம் ஒருமாத காலம் முன்கூட்டியே அறிவித்ததால் பாதயாத்திரை காலத்தை 45 நாட்களாக சுருக்க வேண்டி நேரிட்டது.

இதன்படி 35ஆவது நாளான நேற்று உகந்தை மலையை அடைந்த யாத்திரை குழுவினர் இன்று திங்கட்கிழமை காலை காட்டுக்குள் பிரவேசித்து 19 ஆம் திகதி கதிர்காமம் கொடியேற்றத்தை காணவிருக்கின்றனர்.

(ஐ)

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் படுகாயம்

திருகோணமலை, ஜூன் 12

காட்டு யானையின் தாக்குதலில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் திருகோணமலை பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

கிண்ணியா - கண்டல்காடு கிராமத்தில் நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், கிண்ணியா மகாமாறு பகுதியைச் சேர்ந்த ஆசுதீன் அன்சார் என்ற இரு பிள்ளைகளின் தந்தையே படுகாயமடைந்தார்.

யானையின் தாக்குதலுக்கு இலக்கான நபர் கொட்டியாரக் குடாவில் மீன் பிடிப்பதற்காக வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இது குறித்து மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

ஈழநாடு




# ஆளில்லா விமான தொழிற்சாலை அமைக்க ரஷ்யாவுக்கு ஈரான் உதவி!

## ஆதாரங்களை வெளியிட்டது அமெரிக்கா

வாஷிங்டன், ஜூன் 12

**உக்ரைன் போரில் பயன்படுத்துவதற்காக ரஷ்யாவுக்கு தேவையான ஆளில்லா விமானங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை ரஷ்யாவில் உருவாக்க ஈரான் பங்களிப்பதாக அமெரிக்கா குற்றம்சாட்டியுள்ளது.**




வெள்ளை மாளிகை உளவுத்துறை கடந்த வெள்ளிக்கிழமை தகவல்களை வெளியிட்டது.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவுக்கு கிழக்கே ட்ரோன் உற்பத்தி ஆலையை உருவாக்க ஈரான் ரஷ்யாவுக்குப் பொருட்களை வழங்குகிறது என குற்றம்சாட்டியது.

அமெரிக்க தேசிய பாதுகாப்பு சபையின்செய்தி தொடர்பாளர் ஜோன் கிர்பி கூறுகையில்,

“ரஷ்யாவின் அலபுகா சிறப்பு பொருளாதார மண்டலத்தில் ஓர் ஆலை அடுத்த ஆண்டு தொடக்கத்தில் செயல்படும் என்று அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகள் நம்புகின்றனர்” என்றார்.

மொஸ்கோவுக்குக் கிழக்கே பல நூறு மைல்கள் தொலைவில் உள்ள தொழில்துறை இருப்பிடத்தின் ஏப்ரல் மாதத்தில் எடுக்கப்பட்ட செயற்கைக்கோள் படங்களையும் வெள்ளை மாளிகை வெளியிட்டது, அங்கு ஆலை “அநேகமாக கட்டப்படும்” என்று நம்புகிறது.

கடந்த டிசெம்பரில் ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகம், ஈரானும் ரஷ்யாவும் உக்ரைன் போருக்காக ரஷ்யாவில் ஆளில்லா விமான உற்பத்தி ஆலையை நிறுவுவது குறித்து பரிசீலிப்பதாக நம்புவதாகக் கூறியது.

புதிய உளவுத்துறை தகவல்களின்படி, டாடர்ஸ்தானின் யெலபுகா பகுதியில் இந்த திட்டம் ஆரம்ப கட்டத்துக்கு அப்பால் நகர்ந்துள்ளதாகத் தெரிவிக்கிறது.

போர் தொடங்குவதற்கு முன்பு ரஷ்யாவுக்கு ஆளில்லா விமானங்களை வழங்கியதாகவும், அதன் பின்னர் வழங்கவில்லை என்றும் ஈரான் கூறியுள்ளது.

ஈரானில் தயாரிக்கப்பட்ட ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் ரஷ்ய இராணுவத்துக்கு தொடர்ந்து வழங்கப்படுவதாக கிர்பி கூறினார்.

ஆளில்லா விமானங்கள் கஸ்பியன் கடல் வழியாக ஈரானின் அமிராபாத்திலிருந்து ரஷ்யாவின் மகச்சலாவுக்கு அனுப்பப்படுகின்றன, பின்னர் அவை உக்ரைனுக்கு எதிராக ரஷ்யர்களால் பயன்படுத்தப்படுகின்றன.

மே மாத நிலவரப்படி, ரஷ்யா ஈரானிடமிருந்து நூற்றுக்கணக்கான தாக்குதல் ஆளில்லா விமானங்களையும், ஆளில்லா விமான தயாரிப்பு தொடர்பான உபகரணங்களையும் பெற்றுள்ளது என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

“இது முழு அளவிலான பாதுகாப்பு கூட்டுறவாகும், இது உக்ரைனுக்கும், ஈரானின் அயல் நாடுகளுக்கும் மற்றும் சர்வதேச சமூகத்திற்கும் தீங்கு விளைவிக்கும்” என்று கிர்பி கூறினார்.

உக்ரைனின் வான்பாதுகாப்பை உறுதி செய்ய அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் தீவிரம் காட்டுகின்றன. இந்த முயற்சிக்கு செலவு குறைந்த ஈரனிய ஆளில்லா விமானங்கள் பெரும் தலையிடியாக உள்ளன. மேற்குநாடுகளின் வான்பாதுகாப்பு அமைப்புகளும், அதன் ஏவுகணைகளும் பல இலட்சம் டொலர் பெறுமதியானவை. ஈரானின் தற்கொலை ஆளில்லா வெறும் 50,000 டொலர் பெறுமதியானவை. மலிவான இந்த ஆளில்லா விமானங்களை தாக்க செலவான தற்காப்பு அமைப்பை தொடர்ந்து பயன்படுத்துவதில் சிக்கல்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கப்பலுக்குள் புகுந்த ஆயுததாரிகள் இத்தாலி படை அதிரடி நடவடிக்கை



ரோம், ஜூன் 12

கடலில் பயணித்துக் கொண்டிருந்த கப்பலுக்குள் ஆயுதங்களுடன் நுழைந்தவர்களை இத்தாலி சிறப்பு படையினர் அதிரடி நடவடிக்கை மூலம் பிடித்துள்ளனர்.

துருக்கியைச் சேர்ந்த சரக்கு கப்பல் ஒன்று பிரான்ஸ் நாட்டுக்கு சென்று கொண்டிருந்தது. இந்தக் கப்பல் நடுக்கடலில் பயணம் செய்துகொண்டிருந்த போது, கப்பலில் அடையாளம் தெரியாத சிலர் ஏறியமையை கண்டு கப்பல் ஊழியர்கள் அதிர்ச்சி அடைந்தனர். அவர்களிடம் கத்தி உள்ளிட்ட ஆயுதங்கள் இருந்தன என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில், கப்பல் மாலுமி உள்ளிட்ட ஊழியர்கள் கப்பலின் எந்திர அறையை பூட்டி தங்களை பாதுகாத்தனர். அத்துடன், இத்தாலி மற்றும் பிரான்ஸ் நாடுகளைச் சேர்ந்த கடல்சார் பாதுகாப்பு படையினருக்கு அபாய சமிக்ஞை அனுப்பினர்.

கப்பல் பயணித்த இடத்துக்கு விரைந்த இத்தாலி சிறப்புப்படையினர், கப்பலில் இருந்த ஆயுதக் கும்பலின் தாக்குதலை முறியடித்து, கப்பலை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

கப்பல் நப்லேஸ் துறைமுகத்துக்கு வெளியே நங்கூரம் பாய்ச்சி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அங்கு பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# கஜகஸ்தான் காட்டு தீ; 14 பேர் உயிரிழந்தனர்



அஸ்ரானா, ஜூன் 12

கஜகஸ்தான் நாட்டில் பரவி வரும் பெரும் காட்டுத் தீயால் 14 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.

மத்திய ஆசிய நாடான கஜகஸ்தானின் அபை மாகாணத்தில் பட்யபவப்ஸ்கை வனப்பகுதியில் பயங்கர காட்டுத் தீ ஏற்பட்டது. காட்டுத் தீயால் 60 ஆயிரம் ஹெக்ரெயர் நிலப்பரப்பு தீக்கிரையாகியுள்ளது.

வனப்பகுதியில் தீ வேகமாக பரவி வரும் நிலையில் தீயை அணைக்க தீயணைப்பு, இராணுவம், பேரிடர் மீட்புக்குழு எனப் பலர் களமிறக்கப்பட்டுள்ளனர். வனப்பகுதியில் சிக்கியவர்களை பாதுகாப்பாக மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இந்த காட்டுத் தீயில் சிக்கி 14 உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.

# அமெரிக்காவில் துப்பாக்கி சூடு இருவர் மரணம்; மூவர் படுகாயம்!




வாஷிங்டன், ஜூன் 12

அமெரிக்காவில் உணவகம் ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் இருவர் உயிரிழந்தனர். மூவர் படுகாயமடைந்தனர்.

அமெரிக்காவின் மிசோரி மாகாணம், கன்சஸ் நகரில் உள்ள உணவகத்திலேயே இந்த துப்பாக்கி சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் நடைபெற்ற இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அமெரிக்காவில் கடந்த சில ஆண்டுகளாக துப்பாக்கிச்சூடு சம்பவங்களும், அதனால் ஏற்படும் உயிரிழப்புகளும் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கனடாவில் தொடர் காட்டு தீ; 45 ஆயிரம் ஏக்கர் காடு அழிவு

ரொறன்ரோ, ஜூன் 12

கனடாவில் காட்டு தீ தாக்கம் அதிகரித்துள்ளது. இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் மட்டும் 45 ஆயிரம் சதுர கிலோமீற்றர் காடுகள் அழிவடைந்துள்ளன.

கனடாவில் இதற்கு முன் இல்லாதளவுக்கு காடுகள் தீப்பற்றி எரிந்து வருகின்றன. ஓரிடத்தில் பற்றிய தீயை அணைப்பதற்குள் அடுத்த இடத்தில் தீப்பிடித்து எரிகிறது. இதனால் தீயணைப்புத்துறை அதிரிகாரிகள் தீயை கட்டுக்குள் கொண்டு வர திணறி வருகிறார்கள்.

இந்த வருடத்தில் தற்போது வரை 2,405 முறை தீப்பிடித்துள்ளது. கடந்த வியாழக்கிழமை 431 இடங்களில் தீப்பிடித்திருந்தது. நேற்றுமுன்தினம் அது



422ஆக குறைந்துள்ளது. இருந்தாலும் புதிதாக 10 இடங்களில் தீப்பிடித்துள்ளது.

கனடாவின் மேற்கு பகுதியில் நிலையற்ற சூழ்நிலை நிலவுவதால் மீண்டும் தீப்பிடிக்க ஆரம்பித்துள்ளது. வெப்பநிலை மற்றும் வெப்பக்காற்று வீசுவதால் மோசமான காட்டுத்தீயை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த தீவிபத்தில் 45 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் காடுகள் அழிவடைந்துள்ளன. (ஐ)

# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்; சம்பியன் வென்றது ஆஸி.!




லண்டன், ஜூன் 12

உலக டெஸ்ட் சம்பியன் ஷிப் இறுதிப் போட்டியில் 209 ஓட்டங்களால் இந்திய அணியை வெற்றி கொண்டு அவுஸ்திரேலிய அணி சம்பியன் பட்டத்தை தனதாக்கியது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி கடந்த புதன் கிழமை லண்டன் ஓவல் மைதானத்தில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 469 ஓட்டங்களை குவித்தது. இதில், ட்ராவிஸ் ஹெட் 163, ஸ்டீவன் ஸ்மித் 121 ஓட்டங்களை அதிகபட்சமாக குவித்தனர்.

இந்திய அணியின் பந்துவீச்சில் முஹமட் சிராஜ் 4, முஹமட் சமி, தாகூர் ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸில் தொடர்ந்த இந்திய அணியின் ஆரம்ப வீரர்கள் சொதப்பினர். இதனால், 69.4 ஓவர்களில் 296 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் அந்த அணி இழந்தது. அஜிங்ய ரஹானே 89, தாகூர் 51, ரவீந்திர ஜடேஜா 48 ஆகியோரே அதிகபட்சமாக ஓட்டங்களைப் பெற்றனர்.

அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சில் பட் கம்மின்ஸ் 3, மிற்செல் ஸ்ரார்க், ஸ்கொட் பொலன்ட், கமரூன் கிறீன் ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 84.3 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 270 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதில், அலெக்ஸ் ஹாரி 66, மிற்செல் ஸ்ரார்க் 41, லபுஷாக்னே 41 ஓட்டங்களை அதிகபட்சமாக எடுத்தனர்.

இந்தியாவின் பந்துவீச்சில் பட் கம்மின்ஸ் 3, மிற்செல் ஸ்ரார்க், ஸ்கொட் பொலன்ட், கமரூன் கிறீன் ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

முதல் இன்னிங்ஸில் 173 ஓட்டங்கள் பின்னிலையில் இருந்த இந்திய அணிக்கு, இரண்டாவது இன்னிங்ஸில் ஆஸி. எடுத்த 270 ஓட்டங்களையும் சேர்த்து 444 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இலக்கை விரட்டிய இந்திய அணி தடுமாறியது. அணித் தலைவர் ரோஹித் சர்மா 43 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஷூப்மன் கில் 18, புஜாரா 27?, கோலி 49, ரஹானே 46 என வேகமாக விக்கெட்களைப் பறிகொடுத்தனர்.

63.3 ஓவர்களிலேயே இந்திய அணி 234 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சில் நதன் லயன் 4, ஸ்கொட் பொலன்ட் 3, மிற்செல் ஸ்ரார்க் 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

இதன் மூலம் 209 ஓட்டங்களால் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டத்தை வென்றது.

போட்டியின் நாயகனாக ட்ராவிஸ் ஹெட் தெரிவானார். (ஐ)



## பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் இகா ஸ்வியாரெக் சம்பியன்!

பாரிஸ், ஜூன் 12

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் உலகின் முதல் நிலை வீராங்கனையான இகா ஸ்வியாரெக் சம்பியன் பட்டம் வென்றார்.

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் போட்டி பிரான்ஸின் பாரிஸ் நகரில் நடைபெற்று வருகிறது. இதில், மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டி நேற்று நடந்தது.

இந்த இறுதிப் போட்டியில் போலந்து வீராங்கனை இகா ஸ்வியாரெக், செக் குடியரசு வீராங்கனை கரோலின் முச்சோவா மோதினர்.

இதில் ஸ்வியாரெக் 6-2 என்ற செற் கணக்கில் முதல் செற்றையும், முச்சோவா 7-5 என்ற செற் கணக்கில் இரண்டாவது செற்றையும் கைப்பற்றினர். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செற்றில் 6-4 என்ற கணக்கில் முச்சோவாவை வீழ்த்தி இகா ஸ்வியாரெக் சம்பியன் பட்டத்தை வென்று அசத்தினார்.

22 வயதான ஸ்வியாரெக், கடந்த ஆண்டும் பிரெஞ்சு ஓப்பன் பட்டத்தை வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வெற்றியின்மூலம் மோனிகா செலஸ் (1990, 1991, 2002)க்குப் பிறகு பிரெஞ்சு ஓப்பனில் தொடர்ந்து பட்டங்களை வென்ற இளம் பெண் வீராங்கனை என்ற பெருமையை பெற்றார் ஸ்வியாரெக். மேலும், நான்கு கிராண்ட்ஸ்லாம் இறுதிப் போட்டிகளில் வெற்றி பெற்ற பெண்கள் வரிசையில் செலஸ் மற்றும் நவோமி ஒசாகாவுடன் இணைந்துள்ளார் ஸ்வியாரெக். (ஐ)

# மேற்கிந்திய வீரர் அலிக் அதிவேக அரைச்சதம்!

சார்ஜா, ஜூன் 12


ஐக்கிய அரபு அமீரக அணிக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரை 3-0 என முழுமையாக கைப்பற்றியது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

சார்ஜாவில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற 3ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஐக்கிய அரபு அமீரகம் அணி 36.1 ஓவரில் 184 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

அதிகபட்சமாக விருத்தியா அரவிந்த் 70, முகமது வாசீம் 42, ரமீஸ் ஷாஜாத் 27 ஓட்டங்கள் சேர்த்தனர். ஒரு கட்டத்தில் ஐக்கிய அரபு அமீரகம் அணி 23 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 142 ஓட்டங்கள் சேர்த்து வலுவாகவே இருந்தது. ஆனால், மேற்கொண்டு 42 ஓட்டங்களை சேர்ப்பதற்குள் எஞ்சிய அனைத்து விக்கெட்களையும் தாரை வார்த்தது.

185 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் 35.1 ஓவரில் 6 விக்கெட்களை இழந்து வெற்றி பெற்றது. அறிமுக வீரரான அலிக் அத்தானாஸ் 45 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 9 பௌண்ட்ரிகளுடன் 65 ஓட்டங்கள் விளாசினார். முன்னதாக அவர், 26 பந்துகளில் அரைச்சதம் அடித்திருந்தார். இதன் மூலம் அறிமுக போட்டியில் விரைவாக அரைச்சதம் அடித்த வீரர் என்ற சாதனையை இந்தியாவின் குர்னல் பாண்ட்யாவுடன் பகிர்ந்து கொண்டார்.

ஷமர் புரூக்ஸ் 39, ராஸ்டன் சேஸ் 27 ஓட்டங்கள் சேர்த்தனர். 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 போட்டிகள் கொண்ட தொடரை 3-0 என முழுமையாக கைப்பற்றி கிண்ணத்தை வென்றது. முதல் ஆட்டத்தில் 7 விக்கெட்கள் வித்தியாசத்திலும், 2ஆவது ஆட்டத்தில் 78 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி கண்டிருந்தது. (ஐ)







## பாகிஸ்தானிலும் இலங்கையிலும் ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர்

புதுடில்லி, ஜூன் 12

ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர்பாக பாகிஸ்தான் கொண்டிருந்த நிலைப்பாடு வெற்றி அளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டியை இரு நாடுகளில் நடத்துவதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முன்மொழிந்த திட்டத்தை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை ஏற்றுக்கொண்டதாக தெரிய வருகின்றது.

பாகிஸ்தானின் யோசனைக்கு அமைய முதல் நான்கு போட்டிகள் பாகிஸ்தானில் நடத்தப்படும். அதன் பின்னர் நடுநிலையான மைதானத்தில் தொடரும் போட்டிகளில் இந்தியா பங்கேற்கும் என்றும் தெரிய வருகின்றது.

இதற்கு அமைய பாகிஸ்தானிலும் இலங்கையிலும் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி நடத்தப்படலாம் என கிரிக்இன்போ செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

# ஜனாதிபதி, பிரதமர் மாளிகைகள் கொழும்புக்கு வெளியே மாற்றப்படும்

கொழும்பு, ஜுன் 12

**ஜனாதிபதி மாளிகை, செயலகம் மற்றும் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகையை கொழும்பு நகருக்கு வெளியே மாற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சிறீ ஜெயவர்த்தனபுர - கோட்டை சுற்றுலா தளமாக மட்டுமே திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் சிறீ ஜெயவர்த்தனபுர - கோட்டை பிரதேசத்தில் ஒரே இடத்தில் நிர்வாக வளாகத்தை அமைப்பதற்கு மாற்று காணியை தேடி வருவதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.

உத்தேச 'புதிய கொழும்பு பாரம்பரிய நகர திட்டத்தின்' கீழ், ஜனாதிபதி மாளிகை, செயலகம் மற்றும் அலரி மாளிகை கட்டடம் மற்றும் மலர் வீதியில் உள்ள பிரதமர் அலுவலகம் ஆகியவை சுற்றுலா தலங்களாக பாதுகாக்கப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ், கொழும்பு நகரில் உள்ள மற்ற கட்டடங்கள் முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு மீண்டும் வழங்கப்படவுள்ளது.

இதன்படி, பொது தபால் நிலையம், வெளிவிவகார அமைச்சு கட்டடம், பொலிஸ் தலைமையகம், விமானப்படை தலைமையகம், கடற்படை தலைமையகம், விசும்பய, ஷ்ரவஸ்தி (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விடுதி), கபூர் கட்டடம், ஜவத்தை வீதியிலுள்ள நீர்ப்பாசன திணைக்கள கட்டடம், வெலிக்கடை சிறைச்சாலைகள் மற்றும் பழைய பாதுகாப்பு காலி முகத்திடலில் உள்ள அமைச்சுக் கட்டடம் என்பன குத்தகைக்கு விடப்படுவதற்கு அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது.

## பராமரிப்பு நிலையத்திலிருந்து மூன்று சிறுமிகள் தப்பியோட்டம்

கொழும்பு, ஜுன் 12

மடாடுகம நகருக்கு அருகில் இயங்கும் பராமரிப்பு நிலையம் ஒன்றிலிருந்து மூன்று சிறுமிகள் தப்பி ஓடியுள்ளதாக மடாடுகம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

15, 16 மற்றும் 17 வயதுடைய மூன்று சிறுமிகளே தப்பிச் சென்றுள்ளனர். இவர்கள் மூவரும் கலென்பிதுனுவெவ, நொச்சியாகம மற்றும் தலாவ பிரதேசங்களில் வசிக்கும் சிறுமிகள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நீதிமன்ற உத்தரவின் பேரில், இந்த மூன்று சிறுமிகளும் குறித்த பராமரிப்பு நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தனர் என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

## "சப்ரகமுவ மாகாண ஆளுநராக நவீன் நாளை பதவியேற்பார்!"

கொழும்பு, ஜுன் 12

சபரகமுவ மாகாணத்தின் புதிய ஆளுநராக முன்னாள் அமைச்சர் நவீன் திஸநாயக்க நாளை செவ்வாய்க்கிழமை பதவியேற்கவுள்ளார் என்று ஜனாதிபதியின் ஆலோசகர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

பியகமவில் நடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்த விடயம் தொடர்பில் தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, அடுத்த வாரம் முன்னாள் அமைச்சர் நவீன் திஸநாயக்க ஆளுநராக பதவியேற்பார் என ஜனாதிபதியின் ஆலோசகர் ருவான் விஜவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார்.



தமது பதவியிலிருந்து விலகுவதாக சபரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ அண்மையில் ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்தார். இதனையடுத்து குறித்த பதவி வெற்றிடமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பணம் மோசடி குற்றச்சாட்டில் ஐ. தே. கவை சேர்ந்த பெண் கைது!

கொழும்பு, ஜுன் 12

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பெண் உறுப்பினர் ஒரு கோடியே 14 இலட்சம் ரூபாயை மோசடி செய்தார் என்று கிடைக்கப் பெற்ற 11 முறைப்பாடுகளையடுத்து சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த முன்னாள் மாநகர சபை உறுப்பினர் கொழும்பு - பிலியந்தலை பிரதேசத்தில் வசிப்பவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

பண மோசடி தொடர்பில் கிடைக்கப்பெற்ற 11 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக முன்னாள் மாநகர சபை உறுப்பினருக்கு பிலியந்தலை பொலிஸ் நிலையம் வருமாறு அறிவிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்படி அவர் பொலிஸ் நிலையத்துக்கு வந்தபோது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# கைக்குண்டு வீச முயன்றவர் துப்பாக்கி சூட்டில் காயம்!

கொழும்பு, ஜுன் 12

பொலிஸார் மீது கைக்குண்டு வீச முயன்ற ஒருவர் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்துள்ளார்.

காலி - கராப்பிட்டியில் சோதனைக்காக சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள்மீது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கைக்குண்டு வீச முற்பட்டுள்ளனர். இதன்போது, பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் அவர்களில் ஒருவர் காயமடைந்து கராப்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மற்றைய நபர் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து ரி-56 ரக 105 தோட்டாக்கள் மீட்கப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# டெங்கு நோயின் தாக்கம் கொழும்பில் உச்சமாகும்!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜுன் 12

கொழும்பு மாவட்டத்தில் நுளம்பு பெருக்கம் கணிசமாக அதிகரித்துள்ளது. இதனால், இந்த மாத இறுதிக்குள் டெங்கு நோய் பரவல் கடுமையாக ஏற்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட மற்றும் கொத்தடுவை பிரதேசங்களில் நுளம்பு பெருக்கம் அதிவேகமாக அதிகரித்துள்ளது என்று அந்த சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

ஒரு பகுதியில் தொற்று நுளம்புகளின் அடர்த்தியை மதிப்பிடப் பயன்படுத்தப்படும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவு சுட்டி கொழும்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் கணக்கிடப்படும் வழக்கமான மதிப்பைவிட ஐந்து மடங்கு அதிகமாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

சுட்டெண் மதிப்பு 5வீதமாக இருக்க வேண்டும் என்றாலும் குறிப்பிட்ட சில பகுதிகளில் 25வீதமாக பதிவாகியுள்ளது.

இதனால், கொழும்பு மாவட்டத்தில் ஜுன் இறுதிக்குள் டெங்கு தொற்று தீவிரமடைந்து 'கடுமையான' நோய் பரவல் நிலை உருவாகும் அபாயம் உள்ளது. இதற்கமைவாக எதிர்வரும் காலங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகும் நிலை காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# மைத்திரி வழங்கிய பொதுமன்னிப்பு சட்டவிரோதமானது என்று அறிவிப்பு

கொழும்பு, ஜுன் 12

றோயல் பார்க்கில் இவோன் ஜோன்சன் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஜூட் ஷமந்த ஜயமஹாவுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சட்டவிரோதமாக மன்னிப்பு வழங்கினார் என்று உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்த விடயத்தில் விசேட பொதுமன்னிப்பு வழங்க முடியாது என சட்ட செயலாளர் ஏற்கனவே ஜனாதிபதிக்கு அறிவித்திருந்தார்.

இந்த மன்னிப்பு வழங்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி சட்டமா அதிபரின் ஆலோசனைகளையோ நீதி அமைச்சரின் பரிந்துரைகளையோ பெறவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

றோயல் பார்க் கொலை வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஜூட் ஷமந்த ஜயமஹாவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்குவது தொடர்பான ஆவணம் சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட போதே இந்த விடயங்கள் தெரியவந்துள்ளன.

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு வழங்குவதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உண்மைகள் வெளியாகியுள்ளன. நீதிபதிகள் எஸ். துரைராஜா, யசந்த கோதாகொட மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஜூட் ஷமந்த ஜயமஹாவுக்கு மன்னிப்பு வழங்குவது தொடர்பான கோப்பு, சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளேவினால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

கோப்பில் உள்ள சில ஆவணங்கள் மீது நீதிமன்றத்தின் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.

மனுதாரர் தரப்பு சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன, உரிய பொதுமன்னிப்பு வழங்கும் போது சட்டமா அதிபரிடமிருந்து ஆலோசனைகள் எதுவும் பெறப்படவில்லை எனவும் பொருத்தமான சட்ட நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

குற்றவாளி ஒருவருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்குவதற்கு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையை பின்பற்றாமல் இந்த மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மன்னிப்பு வழங்கும்போது, அசல் வழக்கை விசாரித்த பெஞ்ச் அல்லது நீதிபதியிடமிருந்து அறிக்கையைப் பெற வேண்டும், மேலும் மேன்முறையீடுகளை விசாரித்த நீதிமன்றங்களிலிருந்தும் அறிக்கைகளைப் பெற வேண்டும், பின்னர் அறிக்கைகள் சட்டமா அதிபருக்கு அனுப்பி ஆலோசனைபெற வேண்டும்.

பின்னர், இரண்டு அறிக்கைகளையும் நீதி அமைச்சருக்குப் பரிந்துரைத்த பிறகு, பிரதிவாதிக்கு மன்னிப்பு வழங்க முடியுமா இல்லையா என்பதை பரிசீலிக்க முடியும், இது வழக்கமான நடைமுறையாகும். எனினும் அந்த நடைமுறைகள் எதனையும் பின்பற்றாமல் இந்த மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி தெரிவித்தார்.

அமைச்சரின் பரிந்துரையோ, சட்டமா அதிபரின் ஆலோசனையோ, நீதிபதிகளின் அறிக்கையோ பெறப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்குவது மற்றும் அந்த நடைமுறை தொடர்பான திகதிகள் மற்றும் ஆவணங்கள் குறித்து நீதிமன்றம் சிறப்பு கவனம் செலுத்தியது. (ஐ)

## கூரிய ஆயுதத்தால் ஒருவர் குத்தி கொலை!

கொழும்பு, ஜுன் 12

தனிப்பட்ட தகராறு காரணமாக கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொல்லப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு - தெஹிவளை ஓபன் பகுதியைச் சேர்ந்த 69 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஞாயிற்றுகிழமை இந்த தாக்குதல் இடம்பெற்றதுடன், காயமடைந்தவர் களுபோவில மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்று தெரிய வருகின்றது.

கொலையை செய்த சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளார். அவரை தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ)

## டியாகோ...

படகுகள் ஆபத்தில் சிக்கியவேளை காப்பாற்றப் பட்டவர்களே இவர்கள் எனவும் தெரிவித்துள்ளது.

இராணுவத்தினருக்காக முன்னர் அமைக்கப்பட்ட கோவிட் கூடாரங்களிலேயே இவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என நீதிமன்ற ஆவணங்கள் தெரிவித்துள்ளன.

டியாகோ கார்சியாவில் தான் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளார் என்று பெண் ஒருவர் தெரிவித்துள்ளார். இதேநேரம் அங்கு உண்ணாவிரதப் போராட்டங்களும் நடக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஜனாதிபதியுடன்...

தற்போதுள்ள பிரச்னைகளை தீர்ப்பதுடன் 113 பெரும்பான்மை பலத்தை பாதுகாத்து அரசாங்கத்தின் பணிகளை வலுவாக முன்னெடுத்துச் செல்வதும் இந்தக் கலந்துரையாடலின் மற்றுமொரு நோக்கமாகும்.

இதேவேளை கடந்த வாரம் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்பில், கடந்த காலத்தில் இடம்பெற்ற அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களின் போது தமது சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டமை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாமை குறித்து பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கவலை வெளியிட்டிருந்தனர். இது தொடர்பில் முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை என்று கூறப்படுகின்றது. இது தொடர்பாகவும் இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## சகல...

ளும் ஒன்றிணைந் தால்கூட 50 வீத வாக்குகளைக் கடந்து செல்ல முடியாது. எனவே, எந்த வொரு கட்சியும் பெரும்பான்மை பெற்று வெற்றி பெறுவது என்பது சாத்தியப்படாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

முன்னரும் இதே கருத்தை ஜனாதிபதி கூறியிருந்தார். இது தொடர்பில் எதிர்க் கட்சிகள் கடும் விமர்சனங்களை முன்வைத்த நிலையில், ஐக்கிய தேசிய கட்சியின் செயல்குழு உறுப்பினர்கள் ஜனாதிபதியை சந்தித்து நேற்று கலந்துரையாடினர். இதன்போதே மேற்கண்டவாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், 1977ஆம் ஆண்டுக்கு பின்னர் இதுவரையில் பாராளுமன்ற தேர்தலில் எந்தவொரு தரப்புக்கும் 51 வீதத்தை கடந்து மக்கள் ஆதரவைப் பெற முடியாமல் போனது. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூட ஆறில் ஐந்தை பெற்றுவிடுவோம் என்று நம்பியிருக்கவில்லை. எவ்வாறாயினும், அன்றிலிருந்து இன்று வரை எந்த வொரு தரப்புக்கும் முன்றில் இரண்டு பெரும்பான்மை பாராளுமன்ற தேர்தலில் கிடைக்கவில்லை. ஏனைய கட்சிகளின் ஆதரவை பெற்றே ஆட்சியை அமைக்க முடிந்தது.

இந்த அடிப்படையில் நோக்கும் போது அதிகாரம் அல்லது செல்வாக்கு இன்று யாருக்கு உள்ளது என்பதை யாராலும் கணிக்க இயலாது. ஐக்கிய மக்கள் சக்திக்கோ, மக்கள் விடுதலை முன்னணிக்கோ அல்லது பொதுஜன பெரமுனவுக்கோ 50 வீதத்தை கடந்த அதிகாரமோ மக்கள் செல்வாக்கோ இருக்கும் என கூற இயலாது.

நாட்டின் இன்றைய உண்மையான நிலை இதுவாகும். பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்தால்கூட தேர்தலில் 50 வீதத்தை கடந்து வாக்குகளை பெறுவது என்பது சாத்தியமில்லை.

எனவே, வழமை போல் சிந்தித்து செயல்படுவதால் மக்கள் ஆதரவை பெற்றுக்கொள்வதோ தேர்தலில் வெற்றி பெறுவதோ யாருக்கும் சாத்தியமில்லை. ஆகவே, ஐக்கிய தேசிய கட்சியை பலப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுங்கள் - என்றும் தெரிவித்தார். (ஐ)

## ராஜீவ்...

சுயசரிதை நூலான 'த்ரூ தி புரோக்கன் கிளாஸ்' புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். அதில், ராஜீவ் காந்தி கொலை குறித்த அதிர்ச்சி தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இந்தியாவின் முன்னாள் தலைமை தேர்தல் ஆணையராகவும் இருந்த டி. என். சேஷன் கடந்த 2019ஆம் ஆண்டு மறைந்த நிலையில் கடந்த வாரம் அவரின் சுயசரிதை நூலான 'த்ரூ தி புரோக்கன் கிளாஸ்' புத்தகம் வெளியானது.

புத்தகத்தில் இது குறித்து டி. என். சேஷன் குறிப்பிட்டுள்ளதாவது

"1991ஆம் ஆண்டு மே 10ஆம் திகதி ராஜீவ் காந்தியை தொடர்புகொண்டு தனிப்பட்ட முறையில் எச்சரித்தேன். திறந்தவெளியில் பிரசாரம் செய்வதை மறுபரிசீலனை செய்யுமாறு நான் மீண்டும் அவரைக் கேட்டுக் கொண்டேன். ஆனால், அதற்கு, "நான் இரு முறை இறக்க மாட்டேன்", என சிரித்துக் கொண்டே அவர் பதிலளித்தார்.

நான்கு நாட்கள் கழித்து மே 14ஆம் திகதி ராஜீவ் காந்தியை எச்சரிக்கையாக இருக்க அறிவுறுத்தி காஞ்சி சங்கர மடத்திலிருந்து அழைப்பு வந்தது. நான் எச்சரித்தும் அவர் பிரசாரம் செய்கிறார் என பதிலளித்தேன்.

இது குறித்து உடனடியாக அவருக்கு தந்தி அனுப்பினேன். அது மே 17ஆம் திகதி அவரின் மேசைக்கு சென்றது. ஆனால், அதை படிப்பதற்கு முன்பே மே 21ஆம் திகதி சிறீபெரும்புதூரில் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார். நான் மிகுந்த துயரத்தில் ஆழ்ந்தேன். அவரின் இறுதி சடங்கில் பங்கேற்காமல் வீட்டிலேயே அடைந்து கிடந்தேன்" இவ்வாறு புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

1988-89ஆம் ஆண்டில் ராஜீவ் காந்தியின் பாதுகாப்பு அதிகாரியாக இருந்த டி. என். சேஷன் சிறப்பு பாதுகாப்பு குழு சட்ட முன்வரைவை தயார் செய்து தாக்கல் செய்தார். இந்த சட்டத்தின்படி பிரதமர் மற்றும் அவரின் குடும்பத்தினருக்கும் முன்னாள் பிரதமர் மற்றும் அவரின் குடும்பத்துக்கும் பாதுகாப்பு வழங்கப்படும் என குறிப்பிட்டிருந்தார். ஆனால், ராஜீவ் காந்தி இந்த சட்டத்துக்கு மறுப்பு தெரிவித்தார்.

இதுகுறித்து சேஷன் தனது புத்தகத்தில் "மக்கள் சுயநலத்துடன் இந்த சட்டத்தை நிறைவேற்றியதாக கருதுவார்கள் என நினைத்த ராஜீவ் காந்தி பிரதமர் மற்றும் அவரின் குடும்பத்துக்கு மட்டும் பொருந்தும் வகையில் இச்சட்டத்தை இயற்றுமாறு அறிவுறுத்தினார். முன்னாள் பிரதமர் மற்றும் குடும்பத்துக்கு தேவையில்லை" என கூறியதாக டி.என்.சேஷன் சுயசரிதையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## நிபந்தனைகளை...

வர் மகிந்த ராஜபக்ஷ எம். பி. கூறியுள்ளார்.

அத்துடன், சர்வதேச சக்திகளின் நிகழ்ச்சி நிரலில் செயல்பட்டால் எல்லாம் குழப்பமாகவே இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ் கட்சிகளுக்கும் இடையிலான பேச்சு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் தீர்வை காணும் செயல்பாட்டில் இறங்கியுள்ளார். இதற்கு அரசின் பிரதான பங்காளிக் கட்சியான பெரமுன முழு ஆதரவை வழங்குகின்றது. ஏனைய கட்சிகளும் ஆதரவு வழங்கும் நிலையில் உள்ளன.

இந்த நல்லதொரு சந்தர்ப்பத்தை குழப்பியடிக்க வேண்டாம் என்று தமிழ்க் கட்சிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன். சர்வதேச சக்திகளின் நிகழ்ச்சி நிரலில் செயல்பட்டால் இங்கு எல்லாம் குழப்பத்தில்தான் முடியும்." - என்றார். (ஐ)

# எல்லை நிர்ணய குழுவின் அறிக்கைப்படி தேர்தல் நடந்தால் செலவான வீணாகிவிடும்!

## தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, ஜூன் 12

தேசிய எல்லை நிர்ணய குழுவின் புதிய அறிக்கைக்கு அமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான யோசனை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால், ஏற்கனவே தேர்தலுக்காக செலவிடப்பட்ட 1.1 பில்லியன் ரூபாய் வீண் செலவாகிவிடும். அத்துடன், முன்னர் வேட்புமனு தாக்கல் செய்துள்ள வேட்பாளர்களின் கட்டுப் பணத்தை மீள செலுத்த வேண்டியேற்படும் என்று தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டுக்களை அச்சிடாமல் இருந்த காரணத்தினாலேயே அதனை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டது. இதுவே முதன் முதலாக தேர்தலை காலம் தாழ்த்தப்படுவதற்கு அடிப்படையாக அமைந்தது. தேர்தல் இல்லை என்று எம்மால் கூற முடியாது. ஆனால், அதற்கான நிதியை வழங்கக்கூடிய சூழல் இல்லை என்றே அரசாங்கத்தினால் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட தினத்தில் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட வேண்டுமெனில், அந்த அறிவிப்பை நிறுத்துவதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடையாது. அதன் அடிப்படையிலேயே எம்மால் தேர்தலுக்கான தினம் அறிவிக்கப்பட்டது. தம்மால் நிதியை வழங்க முடியும் என்று திறைசேரி நீதிமன்றத்துக்கு அறிவித்தால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எம்மால் தேர்தலை நடத்த முடியும்.

தேர்தலுக்கான முன்னேற்பாடுகளுக்காக இதுவரை எம்மால் 1.1 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. எனினும் அந்த செலவு பிரயோசனம் அற்றதாகியுள்ளது. ஏற்கனவே பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வேட்புமனுக்கள், தற்போதுள்ள வாக்குச்சீட்டுக்களின் கீழ் தேர்தல் நடத்தப்பட்டால், இந்த செலவு வீணாகாது. எல்லை நிர்ணய குழுவின் புதிய அறிக்கைக்கு அமைய தேர்தல் நடத்தப்பட்டால் 1.1 பில்லியன் செலவு வீண் செலவாகும்.

எல்லை நிர்ணய குழுவுக்கும் எமக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை. எல்லை நிர்ணயம் செய்பவர்களாலேயே தேர்தலையும் நடத்த முடியாது. மதிப்பாய்வு செய்வதற்கு எமக்கு எல்லை நிர்ணய அறிக்கை இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை. புதிய எல்லை நிர்ணயத்தின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற கொள்கை ரீதியான தீர்மானம் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டால் அதனை எம்மால் தடுக்க முடியாது.

கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுக்கும் அரசாங்கமே 1.1 பில்லியன் ரூபா செலவுக்கு பொறுப்புக்கூற வேண்டும். அத்தோடு, புதிய எல்லை நிர்ணயத்தின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வேட்புமனுக்கள் இரத்து செய்யப்படும் என்பதோடு, கட்டுப்பணங்களையும் மீள செலுத்த வேண்டியேற்படும் - என்றார். (ஐ)

## உள்ளூராட்சி...

தப்படுவதால் உள்ளூராட்சி மன்றங்களின் எதிர்கால நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இதன் காரணமாக உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்து செய்வதற்கான யோசனையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், இவ்வாறான பிரேரணையை சமர்ப்பிப்பது தொடர்பில் தமது அமைச்சோ அல்லது அரசாங்கமோ இதுவரை இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை. இது அமைச்சின் ஆலோசனைக் குழுவில் முன்வைக்கப்பட்ட யோசனை மாத்திரமே எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## ஜூலை...

வுக்கு இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளார். எதிர்வரும் ஜூலை 20ஆம் திகதி இந்தியா செல்லும் ஜனாதிபதி அந்த நாட்டு பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேச்சு நடத்துவார் என்று தெரிய வருகிறது. இதேபோன்று அமைச்சர் களையும் சந்தித்து ஜனாதிபதி பேச்சு நடத்தவுள்ளார்.

சீனாவின் பெல்ட் அன்ட் றோட் மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீனா செல்லவுள்ளார். இந்த மாநாடு ஒக்ரோபரில் நடக்கிறது. இதில் பங்கேற்க ரணில் விக்கிரமசிங்கவுக்கு உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு திகதிகளை இந்தியா வழங்கியுள்ளதாக அறிய வருகின்றது. (ஐ)

## போதைப்பொருளுடன் மூன்று பேர் கைதாகினர்

கொழும்பு, ஜூன் 12

கொஸ்கடை பகுதியில் சுமார் ஏழு இலட்சம் ரூபாய் பெறுமதியான ஹெரோயின் மற்றும் ஐஸ் ரக போதைப் பொருட்களை வைத்திருந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களிடம் இருந்து சுமார் 24 கிராம் ஹெரோயின் மற்றும் 23 கிராம் ஐஸ் ரக போதைப்பொருள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 3 மாதங்க...

அரசின் மொத்த வெளிநாட்டுக் கடன் 3 ஆயிரத்து 609 கோடி டொலர்களாக இருந்தது. முக்கிய கடனாளிகளான உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் ஆயிரம் கோடி டொலர்கள், பாரிஸ் கிளப் நாடுகளிடம் 454 கோடி டொலர்கள், பாரிஸ் கிளப் அல்லாத நாடுகளிடம் 678 கோடி டொலர்கள் மற்றும் வணிகக் கடன்கள் ஆயிரத்து 470 கோடி டொலர் கடன் ஏற்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

அத்துடன், வெளிநாட்டு கடன்களில் 70 வீதம் நிலையான வட்டி வீதத்தையும் 29 வீதம் தளம்பல் கொண்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இன, மத...

குறித்து நான் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளேன் என செனட் குழுவின் தலைவர் செனெட்டர் மெனெட்டெஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் படையினர், புலனாய்வு பிரிவினரின் அச்சுறுத்தல்கள் - துன்புறுத்தல்கள் குறித்தும் இன, மத சிறுபான்மையினரை மௌனமாக்குவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் நான் கரிசனை கொண்டுள்ளேன் - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பௌத்தத்தை விமர்சிப்பவர்களின் வாயை அரசு அடைக்க வேண்டும்!

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி



கொழும்பு, ஜூன் 12

**பௌத்த மதத்தை விமர்சித்து வியாபாரம் செய்பவர்களின் வாயை அடைப்பதும் அந்த வியாபாரங்களுக்கு எவ்வாறு பணம் கிடைக்கிறது என்பதை ஆராய்வதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

தான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் சில அமைப்புகள் இவ்வாறான செயல்பாடுகளை முன்னெடுத்தன. அதற்கு தான் இடமளிக்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும், “இன்று பௌத்தத்தின் முக்கியத்துவம் காலப்போக்கில் அதிகரித்துள்ளது. ஆனால், இன்று இந்நாட்டில் சில சக்திகள் புத்த பெருமானுக்கு அவமரியாதையை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு அமைப்புகளை கட்டியெழுப்ப ஆரம்பித்துள்ளதையிட்டு நாம் வருந்துகிறோம். பௌத்த தத்துவத்துக்கு மிகத் தவறான விளக்கங்களை கொடுத்து விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர். புத்தபெருமானின் போதனைகளின் படி இது நமக்கு ஆச்சரியமல்ல. இப்படியான சவால்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் பௌத்தத்துக்கு அவ்வப்போது வந்து கொண்டேயிருக்கின்றன.

இன்றைய ஏழ்மைக்கும் பொருளாதாரப் பிரச்னைகளுக்கும் பௌத்தத்தில் விடை காணப்படுகின்றது. நான் அரசியல் பற்றி பேசவில்லை. பௌத்தத்துக்கு எதிராக பகுப்பாய்வுகளை மேற்கொண்டு வியாபாரம் செய்பவர்களின் வாயை அடைக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. அந்த வணிகங்களுக்கு எங்கிருந்து பணம் கிடைக்கிறது? பௌத்தத்தின் மீது கல் எறிவது எப்படி? இவை சமீபத்திய சூழ்நிலைகள். நான் ஜனாதிபதியாக இருந்த காலத்திலும் சில அமைப்புகள் அதற்கான பணிகளுக்கு தயாராகின. அதற்கு நான் சிறிதும் அனுமதிக்கவில்லை. முடிவைப் பற்றி நான் இறுதியில் பேசப் போவதில்லை” - என்றார். (ஐ)

# கொழும்பு மற்றும் புறநகரங்களில் வெள்ள பாதிப்பை குறைக்க திட்டம்!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



கொழும்பு, ஜூன் 12

கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்பை குறைப்பதற்கும் நிலையான நீண்டகால தீர்வை நடைமுறைப்படுத் துவதற்கும் அமைச்சரவை பத்திரம் ஒன்றை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார்.

இலங்கை காணி மீட்பு கூட்டுத்தாபனத்தால் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கொழும்பு மாநகர பகுதியிலும், கொழும்புக்கு வெளியே உள்ள பகுதிகளிலும் வெள்ளத்தை தணிக்கும் திட்டங்களை இலங்கை காணி மீட்பு கூட்டுத்தாபனம் அடையாளம் கண்டுள்ளதாகவும் குறித்த அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த வருடம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2,100 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டம் பல கட்டங்களாக செயல்படுத்தப்படவுள்ளது.

களனி கங்கை பெருக்கெடுப்பதன் காரணமாக கொலனாவை மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகள் தொடர்ந்தும் வெள்ளத்தில் மூழ்கி வருகின்றன. இதனால் அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

கொலன்னாவை மழை நீர் வடிகால் மற்றும் சுற்றுப்புற சூழலை மேம்படுத்தி மக்களை அந்த நிலையிலிருந்து விடுவிப்பதில் முன்னுரிமை அளித்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். (ஐ)

# 3 ஆண்டுகளாக நடந்த பகிடிவதை தகவல்களை திரட்டுமாறு கட்டளை

## ஜெயவர்த்தனபுர பல்கலைக்கு நீதிமன்று உத்தரவு

கொழும்பு, ஜூன் 12

கடந்த மூன்று ஆண்டுகளில் நடந்த பகிடிவதை சம்பவங்கள் மற்றும் பதிவான வழக்குகள் தொடர்பான விசாரணைகள் குறித்து தனித்தனியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு பல்கலைக்கழகங்கள், பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டு மார்ச் 5ஆம் நாள் ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக (முகாமைத்துவ பீடம்) முதலாம் ஆண்டு மாணவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்தின் போது, ஒரு பெரிய பேக்ஹோ ரயர் படிக்கட்டுகளில் இருந்து கீழே உருட்டப்பட்டதால் உயிருக்கு ஆபத்தான காயங்களுக்கு ஆளான மாணவன் தாக்கல் செய்த மனுமீதான விசாரணையின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு, புவனேக அலுவிஹார, ஷிரான் குணரத்ன மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பசிந்து ஹர்ஷன சில்வா என்ற மாணவனின் தலை, மண்டை ஓடு, மூளை உள்ளிட்ட பல பகுதிகளில் பலத்த உடல் காயங்கள் ஏற்பட்டுள்ளன. மூன்று மாதங்களாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர், இதுவரை முழுமையாக குணமடையவில்லை.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க மற்றும் ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பதில் உபவேந்தர் பேராசிரியர் சுதந்த லியனகே ஆகியோரை பிரதிவாதிகளாக குறிப்பிட்டு மாணவனின் சகோதரி ஷெர்மிளா பிரியதர்ஷனி சில்வா மற்றும் மாணவன் ஆகியோர் அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட பிரச்னைகளை கருத்தில் கொண்ட நீதிமன்றம், பயனுள்ள தீர்வுகளை பரிசீலித்து, தகுந்த உத்தரவுகளை பிறப்பிக்க, விண்ணப்பத்தின் எல்லையை விரிவுபடுத்த வேண்டும் என்று கூறியது.

பகிடிவரைத என்பது பல்கலைக்கழகக் கல்வியில் உடல், உடலியல் மற்றும் நடத்தை சார்ந்த விளைவுகளுடன் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் ஒரு காரணியாக அடையாளம் காணப்பட்டுள்ளது என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.

அதன்படி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் உள்ள அனைத்து 16 அரச பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரை இந்த வழக்கில் எதிர்மனுதாரர்களாக சேர்க்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

உயர்கல்வி அமைச்சருக்கு தேசியக் கொள்கைகள் தொடர்பான உத்தரவுகளை வழங்க அதிகாரம் உள்ளதால் அவரை பிரதிவாதியாக மாற்றவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பகிடிவதையைத் தடுக்க பல்கலைக்கழகங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், கடந்த ஆண்டில் பெறப்பட்ட முறைப்பாடுகள் (பகிடிவதை தொடர்பாக) மற்றும் சம்பவங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து எட்டு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு துணைவேந்தர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பகிடிவதை தொடர்பான அனைத்து விசாரணைகள் குறித்தும் எட்டு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தலையிட விரும்பும் அனைத்து தரப்பினரும் ஓகஸ்ட் 28 ஆம் திகதிக்கு முன்னர் பிரதிநிதித்துவம் செய்ய கால அவகாசம் வழங்கப்படும். அடுத்த விசாரணை ஓகஸ்ட் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# ஊடகவியலாளர்களுக்கு சுதந்திரம் முக்கியமானது

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 12

சமூகத்தில் உள்ள தவறுகளை திருத்தும் பொறுப்பு ஊடகவியலாளர்களுக்கு உள்ளது. அந்த பொறுப்பை நிறைவேற்ற அவர்களுக்கு ஊடக சுதந்திரம் முக்கியமாகும். எனவே, ஊடகவியலாளர்களுக்கு சுதந்திரமாக அறிக்கையிட சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரி வித்தார்.

ஊடக அறிக்கையிடலின்போது ஏற்படும் சவால்கள் தொடர்பில் ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடல் எனும் தொனிப்பொருளில் நேற்றுமுன்தினம் குருநாகலில் நடைபெற்ற செயலமர்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமூகத்தில் உள்ள தவறுகளை திருத்தும் பொறுப்பு ஊடகவியலாளர்களுக்கு உள்ளது. அந்த பொறுப்பை நிறைவேற்ற அவர்களுக்கு ஊடக சுதந்திரம் முக்கியமாகும். சுதந்திரமாக அறிக்கையிடும் சுதந்திரம் ஊடகவியலாளர்களுக்கு இருக்க வேண்டும். அதனையே உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பிரகடனத்திலும், 19ஆம் பிரிவிலும் ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக அறிக்கையிட வேண்டும் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது- என்றார். (ஐ)

# 275 கடவுசீட்டுகளுடன் ஒருவர் கைதானார்!

கொழும்பு, ஜூன் 12

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ளவர்களிடம் இருந்து 275 கடவுச்சீட்டுகளை சேகரித்து வைத்திருந்த நபர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டியில் இயங்கிவரும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே கடவுச்சீட்டுகளுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் ஊடாக இடம்பெறும் மோசடிகளுக்கு இலக்காக வேண்டாம் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

# கிழக்கு ஆளுநர் செந்திலுக்கு தமிழக முதலமைச்சர் வாழ்த்து

திருகோணமலை, ஜூன் 12

கிழக்கு மாகாண ஆளுநராக பொறுப்பேற்றுள்ள செந்தில் தொண்டமானுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தொலைபேசி ஊடாக வாழ்த்து தெரிவித்துள்ளார்.

வாழ்த்துத் தெரிவித்தமைக்காக தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலினுக்கு செந்தில் தொண்டமான் நன்றி தெரிவித்ததுடன், கலைஞரின் ஆட்சி காலத்தில் இலங்கைக்கு பல உதவி திட்டங்கள் வழங்கப்பட்டது. அதை நினைவூட்டும் வகையில் கலைஞரின் நூற்றாண்டு விழாவை இலங்கையில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பதாக தமிழக முதலமைச்சரிடம் தெரிவித்துள்ளார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.